Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 24 செவ்வாய்க்கிழமை (06-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:133




சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவாநகரில் நேற்றுப் பொங்குதமிழ் நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற்றது. ஜெனீவா ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட பேரணியை முதல் இருபடங்களிலும் ஐ.நா.சபைக் கட்டடத்தின் முன்பாக இடம்பெற்ற நிகழ்வில் பொங்குதமிழ் பிரகடனம் பிரகடனப்படுத்தப்படுவதைக் கடைசிப் படத்திலும் காணலாம்.

# சு.கூட்டமைப்பு ஆட்சி அமைத்தால் ஒரு மாதத்தில் மீண்டும் தேர்தல்!

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பிரதமர் ரணில் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்ரல்6

**இப்போதுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தால் 1960 ஆம் ஆண்டு நடைபெற்றதுபோல ஒரு மாதத்திற்குள் மீண்டும் ஒரு தேர்தலை நடத்த வேண்டிவரும். இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை எச்சரிக்கை செய்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

ஏன் ஒரு மாதத்தில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டிவரும் என்பதற்கான காரணத்தையும் பிரதமர் விளக்கினார். தேர்தலில் வெற்றிபெற்ற கட்சிகள் பலவும் எங்கள் ஐக்கிய தேசிய முன்னணியையே ஆதரிக்கின்றன. அதனால், சுதந்திரக கூட்டமைப்பினால் நாடாளுமன்றத்தில் தனக்கு பெரும்பான்மை உண்டு என்று காட்டமுடியாது. அதற்குள்ள ஒரே பரிகாரம் மீண்டும் தேர்தல் நடத்துவதுதான் என்று விளக்கினார் பிரதமர்.

இப்படி மற்றொரு தேர்தல் விரைவில் வருவதை நாம் விரும்பவில்லை. அதனால், இந்தச் சிக்கலிலிருந்து எப்படி வெளியே வருவது என்பது குறித்து ஆராய்வதற்காக ஏனைய கட்சிகளுடன் நாம் தொடர்ந்து பேசி வருகிறோம் என்றார் பிரதமர்.

நேற்றுக்காலை கொழும்பு கிராமோதய மண்டபத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்றத் தேர்தலின்பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முதன்முதலாக உள்ளூர், வெளியூர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அவர்களிடம் பிரதமர் பேசுகையில்:-

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானோ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமோ சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கமாட்டார்கள். இவர்களுடன் நாம் ஏற்கனவே பேசி உள்ளோம். தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கூட்டமைப்பு உயர்மட்டம் கூடிப்பேச்சு

கொழும்பு,ஏப்.6

அறுதிப்பெரும்பான்மை இல்லாமல் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி சுதந்திரக் கூட்டமைப்பின் உயர் மட்டம் நேற்று ஜனாதிபதி தலைமையில் கூடி ஆராய்ந்தது. கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடந்தது.

சுதந்திரக் கூட்டமைபபின் முக்கியஸ்தர்கள் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஆட்சி அமைப்பதற்கு தேவையான ஆகக்குறைந்த 113 ஆசனங்களையாவது பெற்றுக்கொள்வது தொடர்பாகவும்

அமைக்கும் அரசாங்கத்தில் யார் யாரை அமைச்சர்களாக நியமிப்பது என்றும் பிரதமராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்தும் கூட்டத்தில்விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரைப் பிரதமராக நியமிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட கருத்தை பலரும் ஆதரித்தனர்.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

## சந்திரசேகரன், மனோ இன்று வன்னிக்கு!

கொழும்பு,ஏப்.6

மலையக மக்கள் முன்னணியின தலைவரும் புதிய நாடாளுமன்றத்தில் அக்கட்சியின் சார்பில் அங்கம் வகிக்கப்போகும் ஒரேஒரு உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் இன்று கிளிநொச்சியில் புலிகளின் தலைவர்களைச் சந்திக்கவிருக்கிறார்கள் என ஒரு தகவல் தெரிவித்தது.

அதேபோல், கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனும் இன்று வன்னி செல்லவிருக்கிறார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. (க)

## மகிந்த ராஜபக்ஷ இன்று பிரதமராகப் பதவியேற்பு?

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைக்கவிருக்கும் புதிய அரசின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ (வயது 58) இன்று காலை பதவியேற்பார்என எதிர்பார்க்கப்படுகிறது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் இவர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமராக யார் பதவியேற்பது என்பது பற்றிய இழுபறி நிலை

(14ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்க் கூட்டமைப்பு சார்பில்

## தேசியப்பட்டியல் எம்.பி. பதவிகள் வடக்கு - கிழக்கில் ஒவ்வொருவருக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்துள்ள இரு தேசியப் பட்டியல் எம்.பி.பதவிகள் வடக்கிலும் கிழக்கிலும் ஒவ்வொருவருக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தப் பதவிகளை யார் யாருக்கு வழங்குவது என்பது தொடர்பாகச் சில தினங்களில் முடிவு செய்யப்படும என்று தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் கொழும்பில் கூடி ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஏப்.6

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பாக ஆராயக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று அல்லது நாளை கொழும்பில் கூடவிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் தலைமையுடன் ஆராய்ந்து எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று காலை அவர் விடுதலைப் புலிகளின் அரசி

(14ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு கூட்டமைப்பு எம்.பிக்களும் தமிழ்த்தேசியத்துக்கே பாடுபடுவார்கள்



## கருணாவின் துரோகத்துக்குத் துணைபோகமாட்டார்கள் என்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,ஏப்.6

மட்டக்களப்பு - அம்பாறை மாவடடங்களிலிருந்து தெரிவான தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் கருணாவின் பிரதேசவாதத்துக்கு எடுபடமாட்டார்கள். அவரின் துரோகத்துக்குத் துணைபோகமாட்டார்கள். தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி அளிக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவார்கள். தமிழ்த் தேசியத்துக்காகப் பாடுபடுவார்கள் என்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன். பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச்சந்தித்துப் பேசினார் உதயன் செய்தியாளர். அப்போதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு உதவுவீர்களா? என்று கேட்டபோது "ஆட்சி அமைக்க இரண்டு பிரதான கட்சிகளுக்குமே அறுதிப் பெரும்பான்மை கிடையாது. நிலைமையை அவதானித்து வருகிறோம்" என்றார் தமிழ்ச்செல்வன்.

சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலிருந்து தெரிவான தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் ஆதரவைப் பெறுவதற்குக் கருணாமூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இது பற்றித் தமிழ்ச் செல்வனிடம் கேட்டபோது: அவர் அந்த எம்பிக்கள் கருணாவின் பிரதேசவாதத்துக்கு எடுபடமாட்டார்கள். அதை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். கருணாவின் துரோகத்துக்கு துணைபோகவும் மாட்டார்கள். தமிழ்த் தேசியத்துக்காக அவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கூட்டமைப்பு ஆட்சி ஆகக்கூடியது ஆறுமாதங்களுக்கு மேல் நீடிக்காது

## மக்கள் மீது சவாரிவிட முடியாது என்கிறார் ஜயலத்



யாழ்ப்பாணம்,ஏப்.6

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆட்சி அமைத்தாலும் ஆகக்கூடியது ஆறு மாதங்களுக்கு மேல் அந்த ஆட்சி நீடிக்காது. அவர்கள் இனவாத அரசியல் பிரசாரங்களாலேயே வென்றனர். ஆனால், எந்த இனவாத அரசாங்கமும் இந்த நாட்டில் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன.

இப்போதைய அரசியல் நிலை குறித்து உதயனுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார். முன்னாள் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆட்சி அமைக்கவுள்ள கூட்டமைப்பில் ஜே.வி.பியும் அங்கத்துவம் பெறுகிறது. அந்தக்கட்சி எப்போதுமே மக்கள் நலனுக்கு எதிரான அரசியல் போக்குடையது. மக்களுக்குப் பொய்களைக்கூறியே அது வாக்குப் பெற்றுள்ளது. சிலநாள் ஆட்சியில் அந்தப் பொய்கள் எல்லாம் வெளிச்சத்துக்கு வந்து விடும். மக்கள் மீது சவாரி செய்து அரசியல் நடத்தமுடியாது.

பதவியில் இருந்த எமது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பலமான அரசாக விளங்கியது. நாடாளுமன்றத்தில் எங்களுக்குப் பெரும்பான்மைப் பலம் இருந்தது. ஆனால், ஜனாதிபதி அந்த அரசைக் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்தி, இப்போது தொங்கு நாடாளுமன்றம் ஒன்று உருவாக வழி செய்திருக்கிறார். இது குறித்து ஜனாதிபதி சந்திரிகா வெட்கப்பட வேண்டும்.

நான் நாடாளுமன்றம் செல்வதற்கு முன்னரே தமிழ் மக்களுக்கு உதவி செய்தவன். அவர்களின் கோரிக்கைகளுக்காக, தேவைகளுக்காகக் குரல் கொடுத்தவன். அமைச்சராகிய பின்னர் அவர்களுக்கு நிறைந்த பணி செய்தேன். அவர்களின் போராட்டத்திற்காக என்றும் குரல் கொடுப்பேன். வடக்கையும் அங்கு வாழும் மக்களையும் என்றும் நான் மறக்கமாட்டேன். இயன்ற அளவில் அவர்களுக்கு தொடர்ந்து உதவுவேன். என்று முன்னாள் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

(அ)





ஜெனிவா - பொங்குதமிழ் குறித்த செய்தியாளர் மாநாடு ஜெனிவா நகரின் 'வோர்விக்' ஹோட்டலில் வண.பிதா எஸ்.ஜே.இமானுவல் தலைமையில் இடம்பெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் பிரமுகர் கரிகாலன், சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிதம்பரநாதன், சுவிற்சர்லாந்து தமிழ் அமைப்புக்களின் சம்மேளனத்தின் செயலாளர் அன்ரன் பொன்ராஜா ஆகியோர் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பாக சர்வதேசச் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

அந்தச் செய்தியாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

# மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு!

மட்டக்களப்பு,ஏப்.6

மட்டக்களப்பு, மாமாங்கம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.20 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகினர். இவர்களில் மாமாங்கத்தைச் சேர்ந்த ச.சிவகுமார் என்பவர் சூட்டுக்காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயத்துக்குள்ளான மற்றைய நபர் மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தைச் சேர்ந்த நா.குபேந்திரா, இரண்டு பிள்ளைகளின் தந்தை என மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர். இவரைத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் வெள்ளை வான் ஒன்றில் மோட்டார் சைக்கிள் சகிதம் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்டவர் என்று கூறப்படும் நபர் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகி இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து இயங்கி பின்பு 2001 பொதுத் தேர்தலில் 'புளொட்' அமைப்பின் சார்பில் போட்டியிட்டவர் என்றும் -

தற்போது எதுவித தொடர்பின்றி வீட்டில் வசித்து வந்தவர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது. (க)

# தோல்வி அடைந்த பிரபலங்கள்

நடந்து முடிந்த 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள நாடாளுமன்றத்தில் இருந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஒன்பது பேர் தோல்வியடைந்துள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:-

கருணாசேன கொடித்துவக்கு, ஜெயதிலக்க பொடிநிலமே, ஆர்.ஏ.டி. சிறிசேன, சுரணிமல ராஜபக்ஷ, ஆனந்த குலரட்ன, பியசோம உபாலி, டி.எச்.பண்டாரநாயக்க, லால் தர்மபிரிய கமகே, எச்.ஜி.பி.நெல்சன்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பின்வருவோரும் தோல்வி அடைந்துள்ளனர்:-

பத்தேகம சுமித்ததேரர், லிலந்த பெரேரா, ஜயந்த கட்டகொட, பாரத லக்ஷ்மன், சந்தான கதிரராச்சி, ஸ்ரீ ஆந்திரகன்னாடி, பியதாஸ அபயரட்ன, அத்துல நிமலசிறி, அஜித்குமார மெடிகம, எ.எ.விஜயதுங்க ஒலித பிரேமரட்ன, அசோக ஜயவர்த்தன, ரொஜி ரணதுங்க, நெயில் ரூபசிங்க, சரன குணவர்த்தன, சஞ்சீவ் கவிரட்ன, பந்துல ஜயகம, லஷ்மன் விஜயரட்ன, ரூடன் தயாரட்ன, ஜஸ்டின் கலபதி, எச்.ஆர்.விமலசிறி, அநுர கோபல்லாவ, ஆனந்த அபயவிக்கிரம, ஜயந்தஜயவீர, எச்.கே.டி.எஸ்.குணவர்த்தன, ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம், சிட்னி ஜயரட்ன, ஆனந்த சரத் குமாரரணதுங்க, எபாலி சமரவீர, கே.வேலாயுதம், எஸ்.எ.ஆர்.மத்தும பண்டார, டி.டி.டபிள்யூ. விக்கிரமரட்ன ஆனந்த குமாரசிறி, ஜிதமுனி சொய்ஸா, குமார தசநாயக்க, எஸ்.சதாசிவம் மற்றும் எம்.எஸ்.சோமகுமார தென்னக்கோன்.

(க)

# கல்முனைக்குடியில் ஹக்கீமை வழிமறித்துக் கல்லெறி

கல்முனை,ஏப்.6

தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று மருதமுனை சென்று திரும்பும் வழியில கலமுனைக்குடி ஜும்மா பள்ளிவாசலின் அருகில் வைத்து வழிமறிக்கப்பட்டார். கல்வீச்சும் நடந்தது.

இப்படி ரகளை செய்தவர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த முன்னாள் எம்.பியான ஹரீஸின் ஆதரவாளர்கள் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின்போது தற்செயலாக அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் கல்லெறிந்த கூட்டத்தினரைக் கலைத்தனர்.

ரவூப் ஹக்கீம் பொதுத் தேர்தலில போட்டியிடுவதற்கு நியமனப் பத்திரம தாக்குதல் செய்து விட்டுத் திரும்பிய போதும், கல்முனைக்குடி ஜும்மா பள்ளிவாசலருகேயே இப்படியானதொரு சம்பவம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# 3ஆவது அரசியல் சக்தியாக பரிணமித்த ஹெல உறுமய

பதின்மூன்றாவது பொதுத்தேர்தலில் எதிர்பாராதவிதமாக மூன்றாவது சிங்கள அரசியல் சக்தியாக பரிணமித்துள்ளது ஜாதிக ஹெல உறுமய.

ஹெல உறுமய என்ற பெயரில் இயங்கி வந்த கட்சியே பௌத்தபிக்குகளைப்பெருமளவில் சேர்த்துக் கொண்டு தேர்தலுக்குச் சிறிது காலத்துக்கு முன்னரே ஜாதிக ஹெல உறுமய என்ற பெயருடன் தேர்தல் போடடிக்குத் தயாராகியது.

முந்திய தேர்தலில் சிஹல உறுமய ஓர் ஆசனத்தைக்கூட வெல்ல முடியாமல் படுதோல்வி அடைந்தது.

இம்முறை பௌத்த பிக்குகளுடன் ஜாதிக ஹெல உறுமய என்ற பெயரில் போட்டியிட்டு இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களுடன் மொத்தம் 9 ஆசனங்களைப் பெற்றிருக்கிறது. தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகளில் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இரண்டுக்கும் அடுத்த படியாக ஆகக்கூடுதலான வாக்குகளை அதாவது 552,724 வாக்குகளை ஹெல உறுமய பெற்றிருக்கிறது.

கொழும்பு மாவட்டத்திலேயே 3 ஆசனங்களைப்பெறும் அளவுக்கு ஹெல உறுமய மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. (க)

# ஊர்காவற்றுறைத் தாக்குதலில் காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.6

ஊர்காவற்றுறையில் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதலுக்குள்ளானவர் என்று கூறப்படும் இளைஞர் 'ரெலோ' அமைப்பின் முதல்வர் சட்டத்தரணி ந.சிறீகாந்தாவின் உதவியுடன நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை கரச்சிகொத்திக் குளம் பகுதியைச் சேர்ந்த கோபால பிள்ளை ரஞ்சித்குமார் (வயது 24) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்குளளாகிக் காயமடைந்தவராவார்.

தாக்குதலுக்கு இலக்காகிய அவர் காயங்களுடன் ஊர்காவற்றுறை அரசியற் துறையினரிடம் தஞ்சமடைந்தார் என்றும் -

அரசியல் துறையினரின் பாதுகாப்பில் இருந்த அவரை அவரது உறவினர்கள் ரெலோ முதல்வர் சட்டத்தரணி ந.சிறீகாந்தாவின் உதவியுடன யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 11.50 மணியளவில் வீடொன்றினுள் நுழைந்த கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் அங்கிருந்தவர்களைத் தாக்கினர் என்பதும் -

இத்தாக்குதலிலேயே கோ.ரஞ்சித்குமார் படுகாயமடைந்திருந்தார் என்பதும் -

தெரிந்தவையே.

(ஒ-4)

## பொதுநலவாயக் குழுவின் இடைக்கால அறிக்கை:

# அரச ஊடகங்கள் மீது கண்டனம்; தேர்தல் ஆணையத்துக்குப் பாராட்டு

கொழும்பு,ஏப்.6

தேர்தல் காலத்தின் இறுதிக்கட்டத்தில் அரச ஊடகங்கள் பக்கச் சார்பாக நடந்து கொண்டன என்றும் செய்தி வெளியட்டில் சமநிலை பராமரிக்கப்படவில்லை என்றும் கருத்து வெளியிட்டுள்ள பொதுநலவாய தேர்தல் அவதானிப்புக்குழுவின் தலைவர் மார்கரெட் றீட் அம்மையார் தேர்தல் ஆணையாளர், அவரது அலுவலர்கள் மற்றும் பொலீஸார் தேர்தல் தினத்தன்று முன் ஏற்பாட்டோடு செயற்பட்டமைக்காக பாராட்டும் தெரிவித்துள்ளார்.

மார்கரெட் றீட் அம்மையார் பொதுத் தேர்தல் தொடர்பாக வெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அரச ஊடகங்கள் பக்கச்சார்பாக நடந்து கொண்டிருக்கும் போது தேர்தல் செயற்பாடுகள் நியாயமான முறையில் இடம்பெற்றுள்ளன என்று கூறுவது கடினமான காரியம். ஜனநாயகம் செயல்படுவதற்கு அரச ஊடகங்கள் பக்க சார்பில்லாமல் நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு அவை நடந்து கொள்ளாமை தேர்தல் நடைமுறைகள் மீது நீண்ட திரையொன்றையே போட்டு மூடிவிட்டமாதிரி ஆகிவிட்டது. இன்னொரு திரை என்னவென்றால் தேர்தல் பிரசாரங்களின் போது நிகழ்ந்த வன்செயல்களையும அச்சுறுத்தல்களையும் குறிப்பிட வேண்டும்.

வன்செயல்களைக் கட்டுப்படுத்தி சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்ட பொலீஸாரையும் தேர்தல் ஆணையத்தையும் நாம் பாராட்டுகின்றோம். பயங்கரவாதச் செயல்களும், கொலைகளும் ஜனநாயக[illegible]யே தாக்கி அழித்துவிடுகின்றன. அதேபோல் வளர்ச்சியையும், சுபீட்சத்தையும் நசுக்கிவிடுகின்றன.

இவைகளுக்கு மத்தியில் வாக்களிப்பு தினம் ஒரு மகிழ்ச்சிகரமான நாளாக அமைந்துவிட்டது. இவ்வாறு நிலைமை தொடர்ந்து போய்க்கொண்டிருக்கிறது. இந்நிலையில் நாம் தீர்ப்பு ஒன்றும் கூறமுடியாது.

வடக்கு - கிழக்கு நிலைமைகள் பற்றி நான் அறிக்கை எதும்விடுவதற்கு காலம் தேவைப்படுகின்றது.

எமது அவதானிப்பின் படி வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களித்துள்ளார்கள் இரகசியம் பேணப்பட்டுள்ளது.

கட்சிகள் ஒரு சிலபெண்களையே வேட்பாளர்களாக நிறுத்தியிருந்தன. ஆனால், ஏராளமான பெண்கள் வாக்களித்துள்ளார்கள்.

வாக்களிப்பு நிலையங்களில் அவதானிப்புக் குழுவினர் தடையின்றி செயற்பட அனுமதிக்கப்பட்டனர்.(ப)

# ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களை புலிகள் தாக்குகிறார்களாம்

## அக்கட்சிப் பிரமுகர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.6

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் எமது கட்சியின் வாக்குச்சாவடி முகவர்களாகப்பணிபுரிந்தவர்கள் மீதும், ஆதரவாளர்கள் மீதும் புலிகளும், புலிகளுக்குச் சார்பான குண்டர்களும் வீடு வீடாகத் தேடித்திரிந்து தாக்குதல் நடத்திவருகின்றனர். இதனால் இத்தகையவர்கள் தத்தம் வீடுகளில் அமைதியாக வாழ முடியாமல் எமது கட்சி அலுவலகங்களில தஞ்சம் புகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) அறிவித்துள்ளார். ஈ.பி.டி.பி வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தலில் எமக்கு நியாயமாகக் கிடைத்துள்ள வாக்குகளின் மூலமாக தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான காவலர்கள் நாமே என்ற ஆணை எமக்கு வழங்கப்பட்டு விட்டது. இதனைப் பொறுத்துக்கொள்ளவும், சகித்துக் கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் முடியாத சுயநலவாத விசமிகள் எமது ஆதரவாளர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருப்பது எவ் வகையிலும் நியாயமற்றதாகும். இதுதொடர்பாக கட்சி தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் அமைப்புகளுக்கும், பொலீஸாருக்கும், சர்வதேச சமூகத்திற்கும் முறையிட்டுள்ளது. என்றார்.

# அமெரிக்கப் படைகளுக்கு எதிராக ஈராக்கில் பெரும் மக்கள் கிளர்ச்சி!

## கூட்டுப்படையினர் 11 பேர், 20 ஈராக்கியர் உயிரிழப்பு; பலர் படுகாயம்!

பக்தாத்,ஏப்.6

ஈராக்கில் இதுவரை காலமும் அமெரிக்கப்படைகளுக்கு எதிராகச் சுனி இன முஸ்லிம்களே கிளர்ச்சியில் ஈடுபட்டுவந்தனர். இப்போது ஷியா பிரிவு முஸ்லிம்களும் அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராகக் கொதித்தெழுந்திருக்கிறார்கள்.

ஷியா முஸ்லிம்கள் கடந்த இரண்டு நாள்களாக அங்கு ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக நடத்திய கிளர்ச்சிகளில் பதினொரு ஆக்கிரமிப்புப் படையினர் உயிரிழந்திருக்கின்றனர். ஆக்கிரமிப்புப் படைகளின் தாக்குதலில் இருபதுக்கும் அதிகமான ஈராக்கியர்கள் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் ஷியா முஸ்லிம்களே பெரும்பான்மையினர். ஆனால், சதாம ஹுசைனின் ஆட்சிக்காலத்தில் சிறுபான்மையினரான சுனி முஸ்லிம்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டு வந்தது.

ஈராக்கை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆக்கிரமித்து சதாமின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்னா சுனி முஸ்லிம்களே ஆக்கிரமிப்புப் படைகளுடன் அதிகம் மோதிவந்தனர்.

தற்போது பெரும்பான்மையினராக ஷியா முஸ்லிம்களும் ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

ஷியா முஸ்லிம்களின் மதத்தலைவரான மொக்டாடா சடர் என்பவரே இந்தக் கிளர்ச்சிகளுக்கு வழிகாட்டியவர் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்க எதிர்ப்பு வன்முறைகளைத் தூண்டுகின்றது எனத் தெரிவித்து மேற்படி மதத் தலைவருக்கு ஆதரவான பத்திரிகை ஒன்றை அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் மூடியுள்ளன. அத்தோடு, அந்த மதத் தலைவரின் நெருங்கிய உதவியாளர் ஒருவரையும் அமெரிக்கப் படைகள் கைது செய்துள்ளன.

அதனை அடுத்தே ஷியா முஸ்லிம்களின் கிளர்ச்சி தீவிரமடைந்திருக்கின்றது.

புனித நகரான நஜாப்பில் ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்ற ஷியா முஸ்லிம்கள் அங்கு ஸ்பெயின் படையினரின் தலைமையில் இயங்கிய கூட்டுப்படை முகாம் மீது தாக்குதல் நடத்தினர். படையினரும் திருப்பி தாக்கினர்.

அதில் இருபது ஈராக்கியர் கொல்லப்பட்டனர். மேலும் பல டசின் கணக்கானோர் காயமடைந்தனர்.

கூட்டுப்படைகளின் முகாமிலிருந்த அமெரிக்கச் சிப்பாய் ஒருவரும் எல்-சல்வடோர் நாட்டுச்சிப்பாய் ஒருவரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்து சில மணி நேரத்தில் தலைநகர் பக்தாத்தின் கிழக்குப்புற நகர்ப்பகுதியான - பெரும்பான்மை ஷியா முஸ்லிம்களைக் கொண்ட - சடர் நகரில் உள்ள உள்ளூர் பொலீஸ் நிலையத்தையும் அரச கட்டடங்களையும் ஷியா முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அவற்றை மீட்டெடுப்பதற்கு அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் விரைந்த போதே மோதல்கள் ஏற்பட்டன. அதில ஏழு அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர்; 24 பேர் காயமடைந்தனர்.

இதேசமயம் - தெற்கு ஈராக்கிலும் பிரிட்டிஷ் படைகளின் தலைமையிலான கூட்டுப்படைகளின் ஆக்கிரமிப்பில் இருக்கும் பிரதேசங்களிலும் ஷியா முஸ்லிம்கள் பிரிட்டிஷ் படைகளோடு மோதலில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இதற்கிடையில் -

நஜாப் குழப்பங்களை அடுத்து எதிர்ப்புப் போராட்டங்களைக் கைவிட்டு தனது அலுவலகத்தில் அல்லது பள்ளிவாசல்களில் வந்துகூடுமாறு ஷியா முஸ்லிம்களை மதத்தலைவரான மொக்டாடா சடர் கோரியிருக்கிறார் என அவரின் உதவியாளர் ஒருவர் தெரிவித்தார்.


"உங்கள் எதிரிகளை அச்சப்படுத்துங்கள்; அவர்களின் வன்முறைகள் தொடர்பாக அமைதி காத்திருக்க முடியாது" - இப்படி அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார் எனவும் கூறப்பட்டது.

எனினும், கூட்டுப்படைகளுக்கு எதிராக வன்முறைகளை ஆரம்பிக்கக் கோரும் அழைப்புத்தான் இதுவா என்பதை உறுதிப்படுத்தமுடியவில்லை.

இதேசமயம் - அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளுக்கு எதிராக அடிக்கடி தாக்குதல்கள் இடம்பெற்றுவரும் அல்-அன்பர் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் இரு அமெரிகக் படையினர் மரணமாகினர். (க)




ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக ஷியா முஸ்லிம்கள் ஈராக்கில் தொடர்ந்து நடத்திவரும் ஆர்ப்பாட்டங்களின்போது எரிக்கப்பட்ட அமெரிக்க துருப்புக்காவி வாகனத்தின் அருகே ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியபடி குதூகலிப்பதையும் காயமடைந்த ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

ஈராக்கில் தொடரும் ஆர்ப்பாட்டங்களின் போது அடிக்கடி இடம்பெறும் மோதல்களில் உயிரிழந்த தமது சகா ஒருவருக்கு அஞ்சலி செலுத்தும் அமெரிக்கப் படையினரைப் படத்தில் காணலாம். அருகே தற்போதைய ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணமானவர் எனக் கருதப்படும் ஷியா முஸ்லிம்களின் தலைவர் மொக்டாடா சடரின் படம்.

## பிரதமர் வாஜ்பாய்க்கு 'ஷர்வாணி' பாகிஸ்தானில் தயாராகின்றது!

இஸ்லாமாபாத்,ஏப்.6

பிரதமர் வாஜ்பாய்க்காக 'ஷர்வாணி' உடைகள் பாகிஸ்தானில் தயாராகின்றன.

கடந்த ஜனவரி மாதம் இஸ்லாமாபாத்தில் நடந்த 'சார்க்' மாநாட்டில் பிரதமர் வாஜ்பாய் கலந்து கொண்டார். அப்போது கராச்சியைச் சேர்நத ஆடை வடிவமைப்பாளர் அமீர் அத்னான் என்பவர் வாஜ்பாயைச் சந்தித்தார்.

தனக்கு ஒரு 'ஷர்வாணி' உடை தயாரித்துத்தரும்படி அவரிடம் பிரதமர் வாஜ்பாய் விருப்பம் தெரிவித்தார். இதனை ஏற்று அத்னானும், அவரது மனைவியும் இணைந்து வாஜ்பாய்க்காக பாரம்பரியகலை நயத்துடன் 'ஷர்வாணி' உடைகளைத் தயாரித்தார்கள். இதில் 'சல்வார்கமீஸ்', 'வேஸ்ட்கோட்டு' ஆகியவையும் அடங்கியிருக்கின்றன.

இம்மாதக் கடைசியில் பிரதமர் வாஜ்பாஜை சந்தித்து அந்த 3 உடைகளையும் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

"இது நாட்டின் பரிசு" ஆகும் வாஜ்பாய்க்கு அவற்றை அன்பளிப்பாக வழங்குவோம்.

- என்றார் அத்னான்.

வாஜ்பாயின் விருப்பத்தின்படி காஷ்மீர் பாணியில் தையல் கலைநயத்துடன் இவை தயாரிக்கப்பட்டுள்ளன.

## 3 கோடி பேருக்கு சீனாவில் மனநலம் பெரிதும் பாதிப்பு!

சீனாவில் 17வயதுக்குக் குறைவான வயதுடைய 3 கோடி பேர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் மக்கள் தொகை 130 கோடி. கடுமையான கம்யூனிஸக் கொள்கைகளைத் தளர்த்தி அந்நாடு பொருளாதாரத்துறையில் முன்னேறி வருகிறது. அதிநவீன பொருள்களின் ஆதிக்கம் சீனாவையும் ஆட்டிப்படைக்கிறது. நாகரிக மோகத்திற்கும் சீன இளைஞர்கள் அடிமையாகியுள்ளனர்.

நாகரிக வளர்ச்சி ஒரு பக்கம் படுவேகமாக முன்னேறிக் கொண்டிருந்தாலும் மறுபக்கம் பெரும்பாலான இளைஞர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக சீன சுகாதாரத் துறை அமைச்சகம் வருத்தம் தெரிவித்துள்ளது.

பதினேழு வயதுக்குட்பட்ட 'டீன்ஏஜ்' பருவத்தினர் மூன்று கோடிபேர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இத்தகையப் போக்கைத் தவிர்ப்பதற்காக கல்வித்திட்டத்தில் மாற்றங்கொண்டுவரவும் சீன அரசு திட்டமிட்டுள்ளது.

சீன சுகாதாரத்துறை, கல்வித்துறை, சீன இளைஞர் பத்திரிகை ஆகியவை இணைந்து மனநலம் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர்களுக்கு மன ஆற்றுப்படுத்துகை (கவுன்சிலிஸ்ட்) வழங்கத் திட்டமிட்டுள்ளன.

இளம்வயதினர் மனநலம் பாதிக்கப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கு சீன அரசு விரிவான ஆய்வுகளை நடத்தத்திட்டமிட்டிருக்கின்றது. (ம-க)

## இந்திய டாங்கர்கள் நேபாளத்தில் எரிப்பு

இந்தியாவிலிருந்து நேபாளத்துக்கு பெற்றோலைக் கொண்டு சென்ற ஒன்பது 'டாங்கர்' லொறிகளை நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். அவர்களின் தாக்குதலில் மூன்று இந்தியர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேபாளத்தில் அரச செயற்பாடுகளுக்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்பது தெரிந்ததே.

சனி இரவு மக்காவன்பூர் மாவட்டம், கெட்டெளடா என்னும் இடத்தில் உள்ள அந்நாட்டு அமைச்சர் கமல் தாபா என்பவரின் வீட்டின் மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல்கள் நடத்தினர். இதில் அவரது வீட்டுக்காவலாளர்கள் 2 பேர் படுகாயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து காலை இந்தியாவைச் சேர்ந்த 9 வாகனங்களை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வழிமறித்து தீ வைத்து எரித்தனர்.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டிலிருந்து மேற்கே சுமார் 600 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள, கைலாலி மாவட்டத்தில் பெற்றோலை இறக்கிவிட்டு, இந்திய எல்லையை நோக்கி வந்துகொண்டிருந்த இந்த 9 டாங்கர் லொறிகளையே வழிமறித்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தீ வைத்துக் கொளுத்தினர்.

மேலும் சுமார் 300 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ரூபந்தேகி மாவட்டத்தில் ஒரு லொறியைத் தீ வைத்துக் கொளுத்துவதற்கு முன், அந்த லொறியில் வந்தவர்களை நோக்கித் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த 3 இந்தியர்களையும் பிற்பாடு பொலீஸார் மீட்டு அங்குள்ள பைரோகவா மருத்துவமனையில் சேர்த்தனர். அவர்கள் மூவரும் தற்போது நலமாக இருக்கிறார்கள் என அம்மாவட்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள் என்பது தெரிந்ததே.

உலக அரங்கில்

## இளம் பெண்கள் தற்கொலைகள் சிங்கப்பூரில் அதிகரிப்பு

சிங்கப்பூர்,ஏப்.6

சிங்கப்பூரில் இளம் பெண்கள் அதிகளவில் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

சீனா, லித்துவேனியா, கசகஸ்தான ஆகிய நாடுகளில் அதிகப் பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர். இந்தப் பட்டியலில் நான்காவதாக சிங்கப்பூர் இடம்பெற்றுள்ளது.

காதல் தோல்வி, உறவினர் இழப்பால் தனிமை, படிப்பில் தேர்ச்சியடையாததால் ஏமாற்றம், கடன் சுமை, மேலதிகாரிகளின் நச்சரிப்பு உள்ளிட்ட காரணங்களால் தற்கொலை செய்துகொள்ளும் இளம் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மனநல மருத்துவர் சியாபூன் ஹக் தெரிவித்துள்ளார்.

கடந்த 40 ஆண்டுகளில் வயதானோரின் தற்கொலை கணிசமாகக் குறைந்துள்ளது. ஆனால், 15 வயது முதல் 25 வயதுக்கு இடைப்பட்ட வயதுள்ள இளம் பெண்களின் தற்கொலை 40 சதவீதம் அதிகரித்துள்ளது.

மலேசியப் பெண்களை விட சிங்கப்பூருக்கு வேலைதேடிவரும் பெண்களின் தற்கொலைகள்தான் அதிகமாகவுள்ளது. குறிப்பாக இந்தோனேஷியப் பெண்கள் தான் தற்கொலை செய்துகொள்கின்றனர். பணி இடங்களில் நடக்கும் பாலியல் கொடுமை உள்ளிட்ட காரணங்களால் இந்த இளம பெண்கள் தங்கள் பெற்றோருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துகொள்கின்றனர்.

அடுக்குமாடிக் கட்டடங்களில் உயரத்தில் இருந்து உயிரை மாய்த்துக் கொள்வது தான் அதிகமாக நடக்கிறது. ஒரு சிலர் மட்டுமே தீ வைத்துக் கொள்வது, தூக்குப்போட்டுக்கொள்வது, விஷம் குடிப்பது, கடலில் குதிப்பது போன்ற முறைகளை கையாளுகின்றனர்.

- இவ்வாறு சியா பூன் ஹக் தெரிவித்துள்ளார்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில
திருகோணமலை மாவட்டத்தில்
**9A, 1B** எடுத்துச் சிறப்புச்
சித்திபெற்றவரான
**திரு.ச.மாணிக்கத்தியாகராசா (ஆசிரியர்) -**
**திருமதி புஸ்பேந்திரராணி**
ஆகியோரின் செல்வப் புதல்வி

## காயத்திரி (காயா)

*(மாணவி. ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை)*

அவர்களையும் அவரைக் கல்வியறிவூட்டி வழிகாட்டி நெறிப்படுத்திய ஆசிரிய குழாமையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**- அம்பாள் வெதுப்பக உரிமையாளர் குடும்பத்தினர்.**

வல்வெட்டித்துறை.

## மிருசுவில் ஆஸ்பத்திரி பிரசவ விடுதி விரைவில் இயங்கும்

தென்மராட்சி,ஏப்.6

மிருசுவில் ஆஸ்பத்திரி பிரசவ விடுதி விரைவில் இயங்கவுள்ளது.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த ஆஸ்பத்திரி பிரசவவிடுதியின் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும் திருத்த வேலைகள் முடிவுற்றதும் அது மீண்டும் இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரசவவிடுதி இயங்க ஆரம்பித்ததும் தென்மராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச பிரசவத் தாய்மார் நன்மையடைவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

# அருட்கவியே! வாழ்க நீ எம்மான்!

அளவெட்டி தந்த அருட்கவி
அடியார்க்கு அருள் மழை
அன்பர்க்கு அன்பன்
அல்லற்பட்டோரின் அருட்துணை
அறிஞர் போற்றும் அறிவியலாளன்
அருட்கவி அவர்களுக்கு -
கலாநிதிப் பட்டம் - வழங்கி
பெருமைபெற்றுத் திகழ்கின்றது



**Internal University For - Marital Arts - Japan (J.S.K. & U.T.K.F)**

பெருமையுடன் போற்றும்
சுடர் மகேந்திரன் குடும்பம்.

# உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் பங்குனி மாதம் 25 ஆம் நாள் (07.04.2004) புதன்கிழமை சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 6 மணி 47 நிமிடம் முதல் 7.00 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் பறாளாய் திக்கரை முருகன் திருவருளாலும் பெரியோர்களின் ஆசியுடனும்

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோயில்
**சோ.குகனேச சர்மா பூமகாலட்சுமி**
தம்பதிகளின் பௌத்திரனும்

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
**மு.பாலகுருசாமி சர்மா விசாலாட்சி**
தம்பதிகளின் தௌஹித்திரனும்

எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய

***ஷண்மதுர சர்மாவுக்கு***

நயன பிரம்மோபதேசம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்துள்ளதனால் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெறும் மேற்படி வைபவத்திற்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இஷ்டமித்திரபந்துக்களுடன் வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
**கு.சற்குணராஜசர்மா - கிருபாகரி தம்பதிகள**

பறாளாய், சுழிபுரம். (சி34243)(37)

# D.C.M.

பருத்தித்துறை ரோட்,
யாழ்ப்பாணம்.

பழம் ரோட்,
கந்தர்மடம்.

## A/L 2006

புதிய பிரிவு

| | |
|---|---|
| பொருளியல் | : S.வரதராஜன் |
| கணக்கீடு | : B.முகுந்தன் |
| வணிகக்கல்வி | : N.உமாகாந்தன் |

ஆரம்பம்: 07.04.2004

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 4.00மணி |
| கந்தர்மடம் | - 3.00 மணி |

(30470)(34-11-17)

# நலம்பெற வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்



*இந்து கலாசார சமய விவகார அலுவல்கள் அமைச்சின் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு*

## திரு.தி.மகேஸ்வரன்

அவர்கள் கடந்த 27.03.2004 அன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் என்பதைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் மிக மனவேதனையும் அடைகின்றோம்.

அவர் அமைச்சராக இருந்த காலத்தில் எமக்குச் செய்த அரும் பணிகளை நாம் மறக்கவே மாட்டோம். ஆகவே, அவர் எவ்வித உயிராபத்துமின்றி சுகம்பெற்று மீண்டும் உடல் தேறி தனது சேவையைத் தொடர ஸ்ரீ முத்துமாரி அம்பாளைப் பணிகின்றோம். அவரது வெற்றிக்கு வாழ்த்துக்கள் கூறி அமைகின்றோம்.

சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள்
வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்,
சுழிபுரம்.

(சி-34244)(30)

உ
வல்லிபுரேசன் துணை

# திருமாங்கல்யதாரணம்

அன்புடையீர்!

ஸ்ரீமந் சங்கரநாராயணனின் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் பங்குனி மாதம் 25 ஆம் நாள் (07.04.2004) புதன்கிழமை சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும், துதியைத் திதியும், குருவோரையும் கூடிய சுபவேளையாகிய காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
பிரதமகுரு பிரம்மஸ்ரீ
கணபதிசுவாமிக்குருவின பௌத்திரனும்
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனுமாகிய
**சிரஞ்சீவி ஜனார்த்தனசர்மா**
அவர்களுக்கும்

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி
கோயில், மந்துவில் அம்மன் கோயில்
பிரதமகுரு பிரம்மஸ்ரீ
ப.வேதக்குட்டிக்குருவின பௌத்திரியும்
பிரம்மஸ்ரீ வே.நடராஜக்குரு
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியுமாகிய
**சௌபாக்கியவதி காயத்திரி**
அவர்களுக்கும்

பெரியோர்கள் நிச்சயித்தபடி பாணிக்கிரகண திருமாங்கல்யதாரண விழா நடைபெற ஸ்ரீவல்லிபுரமாயவனதும், நடராஜ இராமலிங்கேஸ்வரரினதும் திருவருள் கைகூடியுள்ளது. மணமகளில்லத்தில் நடைபெறும் மேற்படி வைபவத்திற்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் புதன் அதிகாலை 5 மணி மணமகனில்லம் வதூவரகிருகப் பிரவேசம் புதன் மாலை 5 மணி மணமகனில்லம்

**வரவேற்பு : வியாழன் மணமகனில்லம்**

**தங்கள் நல்வரவை நாடும்:**

சிவன் தேவஸ்தானம் ஆவரங்கால் **வே.நடேஸ்வரக்குருக்கள (J.P.) தம்பதியினர்.**

***இரு வீட்டாரின் தனித்தனி அழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள.***

(சி33758)(37) (சி34081)(37)

# NORTH EAST TECHNOLOGIES NET

**'One Computer for each person in the IT Global Village'**

NEW YEAR CLEARANCE SALE - TILL - 30th APRIL 2004!
EVERY PURCHASE OVER RS.10,000/= CARRIES VALUABLE PRESENTS! HURRY UP

"உங்களுக்கு இயலக்கூடிய விலைகளில் கணனிகள்" ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலகப் புகழ்பெற்ற IBM, COMPAQ, கணனிகளுடன் Toshiba Lap Top கணனிகளும் ரூபா 12,000இல் இருந்து உத்தரவாதத்துடன் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள உடனடியாக நாடுங்கள். குறைந்த கையிருப்பு மட்டுமே!

| | | |
|---|---|---|
| PI 200MHz (Tower) | 32Ram | 2Gb |
| PI 233MHz (Tower) | 64Ram | 3Gb |
| PII 333MHz | 64Ram | 3Gb |
| PII 366MHz | 64Ram | 6Gb |
| PII 350MHz | 64Ram | 6Gb |
| PII 400MHz (Tower) | 64Ram | 6Gb |
| PII 450MHz (Tower) | 64Ram | 4Gb |
| PIII 500MHz (Tower) | 128Ram | 9Gb |
| PIII 633MHz (Tower) | 128Ram | 9Gb |

Lap Top **கணனிகள்**

| | |
|---|---|
| Intel Pentium III 600MHz /Dell /Note books | 55,000/= |
| Intel Celeron 600MHz Toshiba/Note books | 50,000/= |

THE PRICE IS ALL INCLUSIVE OF I5" SVGA COLOUR MONITOR, KEY BOARD & MOUSE, and MULTIMEDIA PACKAGES OF 32X CD ROM, SOUND CARD.
(6Months Carry in Warranty)

Computer Accessories at attractive Prices
BRAND NEW COMPUTERS OF ALL CONFIGURATIONS

- P-IV 2.6GHz, 40GB, 128RAM, 15"Philips Monitor,
- P-IV 2.0GHz, 40GB, 128RAM, 15"Philips Monitor,
- AMD 1.8GHz, 40GB, 128RAM, 15"Philips Monitor,
- AMD 1.2GHz, (ATX ) 40GB, 128RAM, 15"LG Monitor
- AMD 1.2GHz, 40GB, 128RAM, 15"Philips Monitor

(3years Warranty)

"தகவல் தொழில்நுட்ப உலகில் ஒவ்வொருவருக்கும் ஒரு கணனி"

**No.34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.**
Tele: 021-2223786, 0777-708498 (Hot line)
Web site: www.net.slt.lk

(சி-33806) (26)

வல்லை முத்துமாரி நாக மகமாரி துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனி மாதம் 25 ஆம் நாள் (07.04.2004) புதன்கிழமை காலை 10.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரத்துடன் கூடிய இடப லக்கின சுபயோக வேளையில்,

திரு. திருமதி
அமரசேனாபதி - சுதர்மராணி
ஆகியோரின் ஏகபுதல்வன்
**வசீகரன்** (வசி)
அவர்களுக்கும்



திரு.திருமதி
சுரேந்திரநாத் - பதுமலக்சுமியம்மன்
ஆகியோரின் சிரேஷ்ட புதல்வி
**ஜலரம்யை** (ஜீவினி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்துவதுடன், தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி அமரசேனாபதி
'அம்பாள் வெதுப்பகம்'
வல்வெட்டித்துறை.

திரு.திருமதி சுரேந்திரநாத்
அரசடி, தொண்டமனாறு.

திரு.திருமதி அமரசேனாபதி
'சுதா பவனம்' மயிலியதனை, தொண்டமனாறு.

(30480)(34-21-19-16)

(☛ இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் வேண்டுகிறோம்)

உதயன்

## அம்பலமானது பேரினவாதம்

தமிழீழ விடுதலைப் புலிகள் திரும்பத் திரும்பக் கூறி வந்த இரண்டு விடயங்கள் தற்போதைய தேர்தலில் தமிழர் தாயகத்திலும் தென்னிலங்கையிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, அந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் புலிகள் இதுவரை மேற்கொண்டுவந்த நடவடிக்கைகள் நியாயமானவைதான் என்பதும் இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

புலிகள் கூறி வந்த விடயங்கள் இவை தாம்:

★ தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள்.

★ ஈழத்தமிழருக்கு அமைதி வழிகளில் நியாயமான தீர்வைத் தருவதற்கு சிங்களப் பேரினவாதம் எப்போதும் இணங்காது.

- இவையே இம்முறை தேர்தலில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களில் 90 வீதமான வாக்குகளைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பெற்றிருக்கின்றது.

தங்களின் தேர்தல் விஞ்ஞாபனம் மூலமும் தேர்தல் பிரசாரங்களின் வாயிலாகவும் ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் புலிகளே என்பதை நிரூபிக்கக்கோரி வாக்குக்கேட்ட தமிழ்க்கூட்டமைப்புக்கு, ஒன்றுதிரண்டு வாகளித்ததன் மூலம் புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஈழத்தமிழர்கள் ஜனநாயக வழியிலும் அங்கீகரித்திருக்கின்றார்கள்.

அடுத்து - ஈழத்தமிழருக்கு அவர்களது நியாயமான உரிமைகளை அமைதி வழியில் வழங்குவதற்கு சிங்களப் பேரினவாதம் இணங்குமா என்ற விடயம்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு, புலிகளுடன் அமைதி முயற்சிகளில் - சமாதானப் பேச்சில் - ஈடுபட்டு வந்தது.

சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்டு விட்டதால் புலிகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற ஒரு கோரிக்கை அப்போது முன்வைக்கப்பட்டது.

'அமைதி வழியில் தமிழர்களுக்கு உரியதை வழங்கப் பேரினவாதம் எப்போதும் இணங்கமாட்டாது. எனவே, தமிழர்களின் அபிலாசைகளை நிறைவு செய்கின்ற அமைதித் தீர்வு கிட்டும்வரை தமிழர்களின் சுயபாதுகாப்புக்குரிய ஆயுதங்களைக் கைவிடமுடியாது' - என்று புலிகள் தெரிவித்திருந்தனர்.

அது உண்மைதான் என்பதைத் தென்னிலங்கைத் தேர்தல் முடிவுகள் அப்பட்டமாக - துலாம்பரமாக - எடுத்துக்காட்டுகின்றன.

இரு தசாப்த கால யுத்தத்தினாலும், கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் போன்ற அழிவுகளாலும் திணறிக்கொண்டிருந்த சமயத்தில், தென்னிலங்கைக்கு சமாதானம் தேவைப்பட்டது. அதில் முனைப்பாக இருந்த ஐ.தே.முன்னணிக்குப் பெரும்பான்மை வாக்குகளை அள்ளிச்சொரிந்து அதனை ஆட்சிப்பீடம் ஏற்றினார்கள் தென்னிலங்கை மக்கள்.

அமைதிவழியில் - சமாதான முறையில் - தமிழருக்கு உரியதைக் கொடுப்பது குறித்து ஐ.தே.மு. அரசு தமிழர்களோடு பேசத்தொடங்கியதும் தனது சுயரூபத்தைத் தென்னிலங்கை காட்டிவிட்டது.

2001 பொதுத் தேர்தலில் பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியும் தனித்தனியாகப் பெற்ற வாக்குகளின் மொத்தத்தைவிட இம்முறை அவை இரண்டும் சேர்ந்து அமைத்த கூட்டமைப்பு பெற்ற வாக்குகள் சுமார் ஒரு லட்சம் அதிகம். அதைவிட, முழு பௌத்த பேரினவாதம் பேசிய ஹெல உறுமயவுக்கு சுமார் ஐந்தரை லட்சம் வாக்குகள் விழுந்துள்ளன.

அதாவது, அமைதி முயற்சிகளுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிராகக் குரல் எழுப்பி - பேரினவாதம் பேசிய - கட்சிகளுக்குத் தமது வாக்குகள் மூலம் பேராதரவு கொடுத்து, அவற்றுக்கு வாக்குகளை அள்ளிக்கொட்டியிருக்கிறார்கள் தென்னிலங்கை மக்கள்.

இதுவரை தமிழர்களோடு அமைதிமுயற்சியில் ஈடுபட்ட ஐ.தே.முன்னணி தென்னிலங்கைச் சிங்களவர்களால் ஓரங்கட்டப்பட்டுள்ளது. அதனால், சிறுபான்மையினர் அதிகம் வாழும் கொழும்பு, நுவரெலியா, கண்டி, பதுளை ஆகியவற்றில்தான் அதனால் வெல்ல முடிந்தது. அதுவும் முற்று முழுதாக சிறுபான்மையினர் அக்கட்சியை ஆதரித்ததால்தான் சாத்தியமாயிற்று.

இந்தப் பெறுபேறுகள், தென்னிலங்கை, பேரினவாதக் கோஷத்துக்கு எடுபட்டுத் தனது சுயரூபத்தை வெளிப்படுத்தி நிற்பதை உறுதிசெய்திருக்கின்றன.

பேரினவாதக் கோஷத்தை அப்பட்டமாகவும் அவ்வாறில்லையெனின் மறைமுகமாகவும் அள்ளிவீசி வாக்குகளைப் பெற்ற அணியே ஆட்சிபீடம் ஏறப்போகிறது. தான்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அந்த அணி பேரினவாதப் பாதையில் செல்வதற்கு எந்த வகையிலும் தயக்கம் காட்டப்போவதில்லை.

---

### தந்தை செல்வாவின் சிராத்த தினத்தில்

# மூத்த அரசியல்வாதிகள் 11 பேரை கௌரவிப்பதற்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம்,ஏப்.6

தந்தை செல்வாவின் 27 ஆவது சிராத்த தின நிகழ்வுகள் எதிர்வரும் 26ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

தந்தை செல்வாவுடன் இணைந்து நீண்டகாலமாக அரசியல் பணிபுரிந்த வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 11 அரசியல்வாதிகள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கொக்குவிலைச் சேர்ந்தவர்களான பண்டிதர் கந்தையா, எஸ். அருணாச்சலம், மருதமுனையைச் சேர்ந்த மருதூர் வாணர், பெரிய போரைதீவைச் சேர்ந்த பூ.மா.செல்லத்துரை, மடுவைச் சேர்ந்த ஜோசப் சேவியர், கரவெட்டியைச் சேர்ந்த ஆனந்த குமாரசாமி, மட்டக்களப்பைச் சேர்ந்த விநாசித்தம்பி, கொழும்பைச் சேர்ந்த இரா. தென்னரசு, வேலணையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, காங்கேசன்துறையைச் சேர்ந்த பண்டிதர் நாகலிங்கம் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மா.க.ஈழவேந்தன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பதினொரு அரசியல்வாதிகளுக்கும் தந்தை செல்வாவின் உருவம் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் - அதற்கான ஏற்பாடுகளை தந்தை செல்வா அறங்காவல் சபையினர் மேற்கொண்டுள்ளனர் எனவும் -

அறங்காவல் சபை நிர்வாகச் செயலாளர் எம்.கே.ஜீவகதாஸ் தெரிவித்தார். (ம-5-6)

# தேர்தல் சட்டவிதிகளை மீறியோர் மீது குடாநாட்டில் வழக்குகள் தாக்கலாகும்

### யாழ்.பொலீஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.6

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தல் சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு யாழ். குடாநாட்டின் பலவேறு பகுதிகளிலும் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டவர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவிருப்பதாக யாழ்பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் தினம் வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேர்தல் சட்டவிதிகளை மீறிய பலர் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும், கைது செய்யப்பட்டு ஒரு சில தினங்களில் விடுவிக்கப்பட்டனர். எனினும், தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலீஸ் தலைமையகம் ஆகியவற்றின் பணிப்பிற்கிணங்க அவர்கள் மீது தேர்தல் சட்டமீறல் குற்றச்சாட்டின் கீழ் தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன - என்று தெரிவித்தார். (ம-4)

## மேலும் 28 தேர்தல் வன்முறைகள்

கொழும்பு,ஏப்6

நேற்றுக்காலை 6மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 28 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறை தடுப்புப் பொலீஸ் பிரிவுக்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் 26 குற்றவியல் சட்டத்தை மீறியவை எனவும் ஏனைய இரண்டும் தேர்தல் சட்ட விதிகளை மீறியவை எனவும தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்தது முதல் இன்று வரை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்து 479 ஆக அதிகரித்துள்ளது. அவற்றில் ஆயிரத்து 185 முறைப்பாடுகள் குற்றவியல் சட்டத்தை மீறியவை எனவும் ஏனையவை 312 தேர்தல் சட்டவிதிகளை மீறியவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி)

## பொலீஸ் அதிகாரிகள் சிலர் பக்கச்சார்பாக நடந்ததாக முறையீடு

கொழும்பு,ஏப்.6

பொதுத் தேர்தலில் பக்கச்சார்பாகக் கடமையாற்றிய சில பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிரர்க முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகளே இவ்வாறான முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர் என்று தேர்தல் செயலகத்தின் பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

சில பொலீஸ் அதிகாரிகள் பக்கச்சார்பாகச் செயற்படுவதாக அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாகப் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என பிரதிப் பொலீஸ் மா அதிபர் கூறினார்.

பொதுவாக நோக்குமிடத்து சகல பொலீஸ் அதிகாரிகளும் பக்கச்சார்பற்ற வகையில் தமது கடமைகளை மேற்கொண்டனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

### வன்னி மாவட்டங்களில்

## செயற்கை அவயம் பொருத்துவதில் வாழ்வுதய நிறுவனம் தொடர்சேவை

மன்னார்,ஏப்.6

மன்னார் வாழ்வுதய நிறுவனத்தினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் செயற்கைக்கால்கள் பொருத்தும் நடவடிக்கைகள் நான்காவது தடவையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிறுவனத்தின் இயககுநர் அருட்தந்தை பி.யேசுராசா தெரிவித்துள்ளார்.

நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவினால் போர்க்காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த நடவடிக்கையானது தற்பொழுதும் தேவையாக இருப்பதையடுத்து தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் 'போலியோ' நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கலிபர் எனப்படும் சப்பாத்து தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவதுடன் இவர்களது பொருளாதாரத்தை மேமபடுத்தும் நோக்கில் ஆடு, மாடு, கோழி வளர்ப்பில் இவர்கள் ஈடுபடுவதறகெனத் தலா 10 ஆயிரம் ரூபா கடனாகவும் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10)

**நாளை**

பங்குனி 25
புதன்கிழமை
(07.04.2004)
திதி : துதியை
பகல் 1.40 வரை.
நட்சத்திரம் : சுவாதி
பகல் 5.06 வரை
சுபநேரம்: 4.37 - 6.07
ராகுகாலம்: 12.07 - 1.37
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

முடியும் என்று நினை.
முடிவென்று நினைக்காதே.

## சங்கீதசபை நடத்தும் வதிவிடக் கருத்தரங்கின் 2ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.6

வடஇலங்கைச் சங்கீதசபை நடத்தும் வதிவிடக்கருத்தரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிமுதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

காலை 7 மணிமுதல் 8 மணிவரை துறைசார் பயிற்சியும் கலந்துரையாடலும் இடம்பெறும். பயிற்சிகளை சங்கீத ஆசிரியர் வி.சிவஞானசேகரம், நடனவிரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவனேசன், மிருதங்க வித்துவான் ப.சின்னராசா, நாடக ஆசிரியை செல்வி இ.ஜெயரஞ்சினி ஆகியோர் வழங்குவர்.

தொடர்ந்து இளைப்பாறிய இசைத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கணபதிப்பிள்ளை தலைமையுரை நிகழ்த்துவார். பின்னர் விரிவுரையும் கலந்துரையாடலும் இடம்பெறும். 'மாணவரின் ஆளுமை வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு' என்ற பொருளில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் விரிவுரை நிகழ்த்துவார்.

முற்பகல் 11.30 மணிக்கு 'ஆரம்பக்கல்வியில் அழகியல் கல்வியின் முக்கியத்துவம்' என்ற பொருளில் கருத்துரை வழங்குவார்.

பிற்பகல் 2மணிக்கு 'துறைசார் செய்முறையும் அறிமுறையும்' என்ற தலைமையில் சங்கீத ஆசிரியர்களான பொன்.ஸ்ரீவாமதேவன், வி.சிவஞானசேகரம், நடன ஆசிரியைகளான செல்வி இ.பரமலிங்கம், திருமதி வி.ஸ்ரீராகுலன், மிருதங்க வித்துவான் எஸ்.வரதராஜசர்மா, நாடக ஆசிரியை திருமதி எஸ்.நவதர்சினி ஆகியோர் துறைசார் பயிற்சிகளை வழங்குவர்.

மாலை 4 மணிக்கு நிகழ்ச்சி தயாரித்தல் தொடர்பாக செல்வி சறோசா தம்பு, செல்வி த.செல்லத்துரை, திருமதி வ.குஞ்சிதபாதம், செல்வி வி.விபுதராஜா, ம.சிதம்பரநாதன், செல்வி இ.ஜெயரஞ்சினி ஆகியோர் கருத்துரை வழங்குவர். பின்னர் 'பாடக்குறிப்புத் தயாரித்தலும் வகுப்பறைக்கற்பித்தலும்' என்ற பொருளில் திருமதி பு.பொன்னம்பலநாதன், திருமதி ய.விவேகானந்தன், ப.சின்னராசா, சி.சிவராஜன் ஆகியோர் விரிவுரை நிகழ்த்துவர். (எ)

## அருட்கவிக்கு ஜப்பானிய கௌரவப்பட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

தற்காப்புக் கலைகளுக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக்கழகம் சீ.வினாசித்தம்பிக்கு கௌரவக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இந்த கௌரவப்பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஜேர்மனி, அமெரிக்கா, ஜப்பான, நோர்வே போன்ற நாடுகளிலிருந்து பேராசிரியர்களும், அறிஞர்களும் விசேட விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ப)

## 13ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு 22ஆம் திகதி

கொழும்பு,ஏப்.6

13ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்திருப்பதாக நாடாளுமன்றச் செயலாளர் பியானி விஜயசேகர தெரிவித்தார்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கப்பெற்றதும் அவர்களுக்கான வசதிகள செய்து கொடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

குறிப்பாக விடுதி வசதி உட்படப் பலவசதிகள் செய்து கொடுகக்கபட உள்ளன. புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவை ஏற்படும் பட்சத்தில் விசேட பயிற்சிகளும் வழங்கப்படும் எனச் செயலாளர் தெரிவித்தார். (ம-ரி)

# நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்



இந்து கலாசார சமய விவகார
அலுவல்கள் அமைச்சின்
முன்னாள் அமைச்சர்
மாண்புமிகு

## திரு.தி.மகேஸ்வரன்

அவர்கள் 27.03.2004 இல் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதைக் கேள்வியுற்று அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவர் விரைவில் பூரண சுகம்பெற்று மீண்டும் சேவையைத் தொடர திருவருள் மிகு பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்,
சிறுப்பிட்டி மேற்கு பெருதலை திருவருள்மிகு பார்வதி பரமேஸ்வரன் திருக்கோயில். நீர்வேலி.

(30485)(34-21-19-16)


**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-34221)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 23 ◊ [illegible]



மறைவு 07 ◊ 03 ◊ 2004

அமரர் **இரத்தினம் சிவம்**

(சாரதி, யாழ்.பல்கலைக்கழகம்)

அன்பு காட்டி ஆ[illegible] எங்கள் தெய்வமே!
ஆத்மா சாந்திபெற [illegible] வேண்டுகின்றோம்.

இன்று (06.04.2004) செவ்வாய்க்கிழ[illegible] அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்ம[illegible] ஆகிய நிகழ்வுகளிலும் தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் ம[illegible]த்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனை[illegible]ரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாலை,
அச்சுவேலி. (30354) (26)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.


**NSB தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலிக் கிளை**

ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்யும் இன்றைய நன்னாளில் வாடிக்கையாளர்கள் அனைவரும் வளம் பலபெற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

- வைப்புக்களுக்கு உயர்வட்டி வீதம்
- குறைந்த வட்டியில் தங்க நகை அடகுச் சேவை
- வைப்புக்கெதிரான கடன் வசதிகள்
- வீடமைப்புக் கடன்கள்
- சுய தேவைக் கடன் வசதிகள்
- முதலாம் பரிசாக 5 மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணத்தை வென்றெடுக்கக் கூடிய "ரிதிரேகா" சேமிப்புச் சான்றிதழ்கள் மற்றும் பல பரிசில்கள்
- சேமிப்புக் கணக்கில் 180 நாள்களுக்கு மேல் 20,000/= ரூபா அல்லது அதற்குக் கூடுதலாக வைத்திருந்தால் வைப்பாளர்களுக்கு இலவச ஆயுள்காப்புறுதி வசதிகள்
- மேலும் பல வகையான வைப்புக்களும் சலுகைகளும்

கணனி மயப்படுத்தப்பட்ட கிளை

குறிப்பு: சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக 14.04.2004 புதன்கிழமை காலை 7.00மணி முதல் வங்கி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்பதை மிக்கமகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

கைவிசேஷத்துடன் உண்டியலும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

ரூபா 50,000/=இற்கு மேற்பட்ட காலவைப்புக்களுக்கு ஓர் அழகான குடை அல்லது வங்கி இலச்சினையுடன் கூடிய ஓர் அழகான பேனா அன்பளிப்பாக வழங்கப்படும். (30434)

31.ஆடியபாதம் வீதி.
(சந்தைக்கு முன்பாக -
தேங்காய் விற்பனை நிலைய மேல்மாடிக் கட்டடம்). திருநெல்வேலி.

- முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
திருநெல்வேலிக் கிளை,
021 222 5852.

மேலும் விவரங்கள் அறிய வேண்டுமாயின் வங்கி முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.

தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலிக் கிளை மேன்மேலும் சிறப்புற வாழ்த்துபவர்கள்:
**சிவகாமி றேடேர்ஸ்,**
தேங்காய் விற்பனையாளர், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.


## அலுவலக இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

இதுவரை காலமும் நல்லூர், நாயன்மார் வீதி, 45/4, என்னும் முகவரியில் இயங்கிவந்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய அலுவலகம் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இல.17, கச்சேரி நல்லூர் றோட், சுண்டுக்குழி என்னும் முகவரியில் இயங்கி வருவதாகப் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (ம-10)

## சிலாபத்தில் மூவர் காயம்

கொழும்பு,ஏப்.6

சிலாபம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்.

வான் ஒன்றில் வந்த சிலர் இத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் இருவர் பெண்கள். இவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். (ம-ரி)

## வர்த்தகர்களுக்கு ரவிராஜ் நேரில் நன்றி தெரிவிப்பு

தென்மராட்சி,ஏப்.6

நடந்து முடிந்த தேர்தலில் வெற்றியீட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்களை நேரில் சந்தித்து கைலாகு கொடுத்து நன்றி யினைத் தெரிவித்தார்.

இதேவேளை -

சாவகச்சேரித் தொகுதியில் தமது வெற்றிக்கு ஆதரவளித்த வாக்காளப் பெருமக்களுக்கும் தமது நன்றியினைத துண்டுப்பிரசுரம் மூலம் வழங்கினார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக நியமனப்பத்திரம் தாக்கல் செய்த பின்னர் சாவகச்சேரி நவீன சந்தையில் வர்த்தகர்கள் முன்னிலையில் தனது முதல் பிரசாரக் கூட்டத்தை இவர் ஆரம்பிததமை குறிப்பிடத்தக்கது. (ம-117)

## விபத்தில் இருவர் பலி

வாழைச்சேனை வாகனேரி சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கல்முனையில் இருந்து பொலன்னறுவை நோக்கிச் சென்ற லொறி ஒன்றும் ஏறாவூர் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

இதேவேளை -

[illegible]லாபத்தில் இடம்பெற்ற மோட்[illegible] விபத்தொன்றில் இரு[illegible]ந்த சனி[illegible] விபத்து இட[illegible]

உயிரிழந்த இரு[illegible] சைக்கிள்களும் பாதையை [illegible] விலகி மின்கம்பம் ஒன்றில் மோதியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டது. (ம-ரி)

## புனித சனிக்கிழமை சாவகச்சேரி சேமக்காலைக்கு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.6

எதிர்வரும் 10ஆம் திகதி புனித சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் சாவகச்சேரி சேமக்காலைக்கு மக்கள் செல்ல சாவகச்சேரி படைத்தளபதி அனுமதி வழங்கியுள்ளார்.

தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி அதிவண. சுப்பிரமணியம் ஜெபநேசன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி சேமக்காலைக்கு புனித சனிக்கிழமையன்று சென்று தமது உறவுகளின் கல்லறைகளைத தரிசிக்க விரும்புபவர்கள் தமது பெயர், முகவரிகளை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்பாக சபை ஊழியனுக்குத் தெரிவிக்கவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

சில கல்லறைகள் கடந்த கால இராணுவ நடவடிக்கையினால் சீர்கெட்டு அழிந்து போயுள்ளன.

எனவே, அவற்றை யாருடையது என்று கண்டு பிடித்துக் கூறினால் அவற்றைப் பேணிப் பாதுகாப்போம் எனவும் பேராயர் கூறியுள்ளார்.(ம-185)


**உடன் தேவை**

பெண்களுக்கான சகல ஆடைகளும் தைப்பதில் அனுபவம் உள்ள பெண்கள் உடன் தேவை.

தொடர்பு:
**து.தெட்சணாமூர்த்தி,**
140.அரசடிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(30499)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 ◊ 10 ◊ 1936



உதிர்வு 19 ◊ 03 ◊ 2003

அமரர் **இராசா கனகலிங்கம்**

(யாழ்.மாவட்டப் புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்க இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்)

திதி: 06-04-2004

"திடீரென அணைந்த தீபச்சுடர் ஒளி"
அன்பால் எமை அணைத்து
அறிவால் நிமிர வைத்து
பண்பான மனிதராக
பார் மீது உலவ வைத்தவரே!
ஊர் போற்றும் உத்தமனாக
சேவையின் சிகரமாக வாழ்ந்தீரே!

ஒருவருடம் அப்பா! உமைப்பிரிந்து- எம்
இதயங்கள்; இன்னும் இரத்தம் வடிந்தபடி....
உருண்டோடும் கண்ணீரும் உதிர்ந்தபடி தொடர...
உதிராத உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி...நாங்கள்

பாசமிகு அப்பா! சோகம் இன்னும் குறையவில்லை
நேசமிகு உங்கள் உருவம் நெஞ்சை விட்டு மறையவில்லை
மண்ணை விட்டு மறைந்தாலும் எம் மனங்களில் என்றும்
உங்கள் நினைவுகள் சுமந்தபடி!

அழியாத நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்தனைகளுடன்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பெறாமக்கள்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(30413)(38-21-19-16)

# மூன்றாவது வருட இதய அஞ்சலி



இசைக்குயில்

அமரர் **V.A.இராமையா**

(நாதஸ்வர வித்துவான்)

தோற்றம் 10-03-1930

மறைவு 25-03-2001

ஆண்டுகள் மூன்றும் ஆயிற்றோ நீர் எமைப் பிரிந்து
கானஓசை எம் காதுகளில் இப்போதும் கேட்கிறதே!
மீண்டும் ஒருமுறை இங்கு வரமாட்டீரோ என்று
ஏங்கித் தவிக்கின்றோம் இன்று உமை நினைந்து!

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

10 ஆம் கட்டை,
ஆவரங்கால்.
T.P.: 0777 168509

(30435)(319-16)

# பொதுத் தேர்தல் -2004
# மாவட்ட ரீதியான பெறுபேறுகள்

## கம்பஹா மாவட்டம்

| கட்சி | வத்தளை | நீர்கொழும்பு | கட்டான | திவுலப் பிட்டிய | மீரிகம | மினுவாங் கொட | அத்தன கல்ல | கம்பஹா | ஜா-எல | மஹர | தொம்பே | பியகம | களனி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 28344 | 24357 | 41823 | 34257 | 39853 | 41026 | 45529 | 51944 | 42453 | 47558 | 40327 | 34502 | 25744 |
| ஐ.தே.மு. | 34041 | 33709 | 31913 | 26267 | 29523 | 28632 | 24282 | 24652 | 34248 | 27012 | 23111 | 24696 | 21450 |
| ஐக்கிய சோஷலிச கட்சி | 233 | 277 | 282 | 234 | 365 | 248 | 237 | 116 | 236 | 178 | 192 | 197 | 147 |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 03 | 03 | 04 | 02 | 02 | 07 | 02 | 01 | 04 | 01 | 02 | 07 | 01 |
| ஜாதிக ஹெல உறுமய | 4552 | 1759 | 6254 | 5666 | - | 9292 | 8741 | 11357 | 6009 | 11194 | 5943 | 11434 | 10956 |
| புதிய இடதுசாரி முன்னணி | 102 | 148 | 98 | 40 | 46 | 63 | 54 | 53 | 97 | - | 26 | 57 | 51 |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 20 | 07 | 04 | 03 | 01 | 04 | 04 | 35 | 09 | 02 | 06 | 03 | 09 |
| றுகுணு மக்கள் கட்சி | 04 | 03 | 02 | 03 | 03 | 02 | 03 | 05 | 06 | 04 | 03 | 02 | 02 |
| லிபரல் கட்சி | 04 | 00 | 06 | 04 | 02 | 01 | 07 | 08 | 08 | 05 | 20 | 01 | 05 |
| இலங்கை தேசிய முன்னணி | 00 | 03 | 05 | 00 | 01 | 02 | 07 | 02 | 01 | 03 | 01 | 01 | 02 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 478 | 387 | 637 | 278 | 193 | 339 | 189 | 327 | 671 | - | 164 | 306 | 251 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி | 15 | 07 | 10 | 03 | 03 | 04 | 04 | 02 | 04 | 07 | 04 | 04 | 06 |
| சுவராஜ்ய கட்சி | 07 | 04 | 10 | 05 | 06 | 01 | 04 | 12 | 05 | 12 | 12 | 15 | 35 |
| பூமிபுத்திர குழுக்கட்சி | 04 | 04 | 62 | 17 | 10 | 15 | 08 | 15 | 04 | 26 | 07 | 15 | 11 |
| சுயேச்சைக் குழு 1 | 05 | 11 | 07 | 03 | 01 | 09 | 03 | 03 | 04 | 05 | 05 | 04 | 04 |
| சுயேச்சைக் குழு 2 | 00 | 04 | 02 | 02 | 02 | 03 | 02 | 03 | 00 | 00 | 04 | 01 | 02 |
| சுயேச்சைக் குழு 3 | 01 | 04 | 13 | 09 | 16 | 09 | 22 | 17 | 10 | 12 | 14 | 09 | 06 |
| சுயேச்சைக் குழு 4 | 04 | 00 | 03 | 02 | 04 | 07 | 03 | 06 | 03 | 03 | 04 | 05 | 04 |
| சுயேச்சைக் குழு 5 | 01 | 01 | 02 | 01 | 02 | 01 | 02 | 00 | 01 | 03 | 00 | 02 | 01 |
| சுயேச்சைக் குழு 6 | 06 | 04 | 02 | 01 | 04 | 02 | 02 | 01 | 01 | 05 | 01 | 02 | 02 |
| சுயேச்சைக் குழு 7 | 06 | 07 | 11 | 05 | 04 | 04 | 06 | 07 | 04 | 04 | 02 | 03 | 02 |
| சுயேச்சைக் குழு 8 | 02 | 04 | 01 | 04 | 03 | 03 | 04 | 04 | 09 | 00 | 02 | 03 | 04 |
| சுயேச்சைக் குழு 9 | 16 | 09 | 10 | 15 | 20 | 09 | 13 | 07 | 06 | 12 | 13 | 09 | 11 |
| சுயேச்சைக் குழு 10 | 16 | 14 | 18 | 26 | 20 | 26 | 27 | 20 | 23 | 16 | 22 | 14 | 17 |

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 5,09,963 - 9
ஐக்கிய தேசிய முன்னணி - 3,67,572 - 6
ஜாதிக ஹெல உறுமய - 1,02,516 - 2

## களுத்துறை மாவட்டம்

| கட்சி | பாணந்துறை | களுத்துறை | பண்டாரகம | பேருவளை | ஹொரணை | அகலவத்தை | புளத்சிங்கள | மத்துகம | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 35687 | 37958 | 41850 | 33583 | 38421 | 33939 | 25374 | 36294 | 8102 |
| ஐ.தே.மு. | 24020 | 26255 | 27240 | 30210 | 26764 | 36486 | 22767 | 24912 | 4097 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் மக்கள் முன்னணி | 35 | 44 | 47 | 94 | 46 | 56 | 40 | 58 | - |
| ஐக்கிய லலித் முன்னணி | 11 | 19 | 18 | 21 | 26 | 23 | 17 | 24 | 02 |
| ஐக்கிய சோஷலிச கட்சி | 79 | 47 | 52 | 75 | 41 | 61 | 37 | 40 | - |
| ஜாதிக ஹெல உறுமய | 14274 | 8324 | 8989 | 6751 | 7166 | 2538 | 3621 | 4542 | 1410 |
| புதிய இடதுசாரி முன்னணி | 113 | 118 | 87 | 37 | 84 | 39 | 34 | 35 | 13 |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 02 | 02 | 09 | 02 | - | 05 | 06 | 06 | 02 |
| றுகுணு மக்கள் கட்சி | 04 | 03 | 08 | 03 | 04 | 06 | 01 | 03 | - |
| இலங்கை தேசிய முன்னணி | 02 | 01 | 05 | 07 | 02 | 05 | 03 | 06 | - |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 04 | 04 | 01 | 02 | 05 | 03 | 05 | 03 | - |
| சுவராட்சிய கட்சி | 08 | 06 | 18 | 14 | 28 | 16 | 13 | 16 | 01 |
| பூமி புத்திர கட்சி | 12 | 07 | 10 | 12 | 12 | 09 | 05 | 09 | 03 |
| சுயேச்சைக் குழு 1 | 04 | 07 | 03 | 07 | 04 | 10 | 06 | 14 | 01 |
| சுயேச்சைக் குழு 2 | 01 | 03 | 05 | 07 | 06 | 02 | 06 | 05 | - |
| சுயேச்சைக் குழு 3 | 01 | 03 | 02 | 02 | 05 | 02 | 01 | 03 | - |
| சுயேச்சைக் குழு 4 | 03 | 05 | 04 | 04 | 02 | 04 | 05 | 01 | 01 |
| சுயேச்சைக் குழு 5 | 03 | 02 | 03 | 04 | 04 | 05 | - | 03 | - |
| சுயேச்சைக் குழு 6 | 06 | 03 | 08 | 05 | 03 | 04 | 05 | 06 | 01 |
| சுயேச்சைக் குழு 7 | 05 | 04 | 06 | 02 | 07 | 07 | 04 | 04 | 04 |
| சுயேச்சைக் குழு 8 | 16 | 15 | 14 | 27 | 13 | 21 | 11 | 22 | 01 |
| சுயேச்சைக் குழு 9 | 19 | 24 | 26 | 24 | 23 | 35 | 26 | 34 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 74309 | 72854 | 78405 | 70883 | 72666 | 63246 | 50987 | 66030 | 13639 |
| நிராகரிக்கப்பட்டவை | 3240 | 3766 | 3826 | 3912 | 3407 | 4665 | 3728 | 4000 | 197 |
| மொத்த வாக்குகள் | 77549 | 76620 | 82231 | 74795 | 76073 | 67911 | 54715 | 70030 | 13836 |

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு - 2,91,208 - 6
ஐக்கிய தேசிய முன்னணி - 2,12,721 - 3
ஜாதிக ஹெல உறுமய - 56,615 - 1

# பொதுத் தேர்தல் -2004
# மாவட்ட ரீதியான பெறுபேறுகள்

## யாழ்ப்பாண மாவட்டம்

| கட்சி | மானிப்பாய் | சாவகச்சேரி | கோப்பாய் | யாழ்ப்பாணம் | பருத்தித் துறை | உடுப்பிட்டி | காங்கேசன் துறை | நல்லூர் | ஊர்காவற் துறை | வட்டுக் கோட்டை | கிளிநொச்சி | இடம்பெயர்ந்த மக்கள் | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 23709 | 30782 | 26805 | 16353 | 22400 | 24172 | 18499 | 22321 | 13911 | 24240 | 29574 | 1209 | 3175 |
| ஈ.பி.டி.பி. | 3239 | 1252 | 2108 | 1710 | 676 | 874 | 2395 | 2431 | 1406 | 1513 | 145 | 443 | 420 |
| சுயேச்சை குழு - 1 | 980 | 492 | 453 | 360 | 248 | 362 | 405 | 800 | 51 | 485 | 171 | 09 | 340 |
| ஹெல உறுமய | - | 09 | - | - | 05 | 12 | 05 | - | 04 | 09 | 08 | 01 | 01 |
| புதிய இடதுசாரி முன்னணி | 54 | - | 36 | - | 09 | 23 | 25 | 50 | 14 | 32 | - | 01 | 07 |
| சோசலிச முன்னணி | 36 | - | 32 | - | 22 | 25 | 27 | 32 | 11 | 42 | - | 12 | 01 |
| ருகுணு மக்கள் கட்சி | - | - | - | - | 03 | 05 | 07 | 07 | 05 | 06 | - | 02 | - |
| ஸ்ரீல. முஸ்லிம் காங்கிரஸ் | - | - | - | 157 | 02 | 13 | 07 | 14 | 41 | 09 | - | 1717 | 01 |
| ஸ்வராஜ்ய | - | - | - | - | 01 | 06 | 08 | 05 | 03 | 07 | - | 03 | 01 |
| சுயேச்சை குழு - 2 | - | - | - | - | 06 | 15 | 08 | 14 | 08 | 15 | - | 01 | - |

**அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் :- 3,03,259**
**நிராகரிக்கப்பட்டவை :- 21,233**
**செல்லுபடியான வாக்குகள் :- 2,82,026**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி :- 2,57,320 - 8**
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி :- 18,612 - 1**



யாழ். மாவட்டத் தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஆதரவாளர்களுடன் யாழ். செயலக முன்றிலில் அளவளாவும் காட்சி. (படம்: வசந்தன்)

## மட்டக்களப்பு மாவட்டம்

| கட்சி | கல்குடா | மட்டக்களப்பு | பட்டிருப்பு | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|
| இலங்கை தமிழரசு கட்சி | 43503 | 57144 | 57052 | 3312 |
| ஈ.பி.டி.பி. | 568 | 1099 | 821 | 68 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 2706 | 22176 | 299 | 547 |
| ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டணி | 38 | 307 | 12 | 09 |
| ஐக்கிய தேசிய முன்னணி | 1364 | 3819 | 877 | 91 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 22244 | 19612 | 652 | 623 |
| ஐக்கிய சோசலிஷ கட்சி | 15 | 36 | 20 | - |
| ஜாதிக ஹெல உறுமய | 03 | 06 | 05 | 03 |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 07 | 24 | 01 | - |
| ஸ்ரீலங்கா தேசிய முன்னணி | 32 | 12 | 05 | - |
| றுகுணு மக்கள் கட்சி | 04 | 06 | 14 | - |
| ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 75 | 72 | 07 | 01 |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 44 | 711 | 248 | 07 |
| புதிய இடதுசாரி முன்னணி | 41 | 57 | 20 | 01 |
| சுயேச்சைக் குழு 1 | 52 | 37 | 13 | - |
| சுயேச்சைக் குழு 2 | 20 | 36 | 09 | - |
| சுயேச்சைக் குழு 3 | 05 | 17 | 04 | - |
| சுயேச்சைக் குழு 4 | 12 | 18 | 23 | - |
| சுயேச்சைக் குழு 5 | 02 | 17 | 02 | - |
| சுயேச்சைக் குழு 6 | 05 | 22 | 07 | - |
| சுயேச்சைக் குழு 7 | 13 | 12 | 05 | - |
| சுயேச்சைக் குழு 8 | 30 | 31 | 22 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 70783 | 105811 | 60118 | 4663 |
| நிராகரிக்கப்பட்டவை | 3862 | 5592 | 3125 | 69 |
| மொத்த வாக்குகள் | 74645 | 111403 | 63243 | 4732 |

**இலங்கைத் தமிழரசுக் கட்சி :- 1,61,011 - 4**
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர[illegible] [illegible] - 1**

## திருகோணமலை மாவட்டம்

| கட்சி | சேருவில | திருகோண மலை | மூதூர் | தபால் மூல வாக்களிப்பு |
|---|---|---|---|---|
| இலங்கை தமிழரசு கட்சி | 6178 | 43880 | 17005 | 1892 |
| ஈ.பி.டி.பி. | 61 | 393 | 49 | 97 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 19607 | 6229 | 1854 | 3362 |
| முஸ்லிம் ஐக்கிய மக்கள் கூட்டணி | 32 | 33 | 50 | 02 |
| ஐக்கிய தேசிய முன்னணி | 10348 | 3193 | 689 | 1463 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 4647 | 13378 | 45523 | 1450 |
| புதிய இடதுசாரி முன்னணி | 12 | 35 | 32 | 08 |
| ஜாதிக ஹெல உறுமய | 563 | 119 | 21 | 88 |
| றுகுணு மக்கள் கட்சி | 11 | 17 | 53 | - |
| பூமிபுத்திர கட்சி | 12 | 10 | 42 | 01 |
| சுயேச்சைக் குழு 1 | 11 | 16 | 31 | 02 |
| சுயேச்சைக் குழு 2 | 01 | 04 | 14 | - |
| சுயேச்சைக் குழு 3 | 14 | 06 | 02 | 01 |
| சுயேச்சைக் குழு 4 | 02 | 04 | 04 | - |
| சுயேச்சைக் குழு 5 | 14 | 13 | 26 | - |
| சுயேச்சைக் குழு 6 | 09 | 17 | 30 | 02 |
| செல்லுபடியான வாக்குகள் | 41520 | 67347 | 65425 | 8308 |
| நிராகரிக்கப்பட்டவை | 2424 | 3073 | 3080 | 273 |
| மொத்த வாக்குகள் | 43944 | 70420 | 68505 | 8581 |

**இலங்கைத் தமிழரசுக் கட்சி :- 68,955 - 2**
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் :- 65,187 - 1**
**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு:- 31,053 - 1**

யாழ்ப்பாண

உ

# உபநயன அழைப்பு

காலம்: சுபானு வருஷம் பங்குனி 25 (07.04.2004) புதன்கிழமை
சுபநேரம்: பகல் 1.50 மணிமுதல் 2.35மணிவரை

சிவஸ்ரீ கதிர் செல்லப்பாக்குருக்களின் பௌத்திரனும்
எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய

சிரஞ்சீவி **கஜப்பிரியசர்மா**

அவர்களுக்கு மாதகல் பாணாவெட்டி அம்மன் கோயிலில் உபநயன பிரம்மோபதேசம் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் வருகைதந்து செல்வனை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்கள்:
திருமதி சே.தவமணிஅம்மா புத்திரர்கள்
பிரம்மஸ்ரீ இரகுநாதஐயர் புத்திரர்கள்

சிவஸ்ரீ சே.நகுலேஸ்வரக்குருக்கள்.
திருமதி யாழரசி.

(30503)(34-14-16)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 09 - 1936



மறைவு 21 - 03 - 2000

## திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்

திதி:06.04.2004 (பிரதமை)

நல்லதொரு கணவருடன்
நாலிரண்டு பிள்ளைகள் பெற்று
நாற்பத்தியேழாண்டு காலம்
நமக்காக வாழ்ந்த தாயே!

நல்ல பேரக் குழந்தைகளை
நாள்தோறும் சீராட்டி
நல்ல புத்திமதிகள் கூறி
நம்மோடு வாழ்ந்த தாயே!

நான்காண்டு ஆனதம்மா
நாம் உங்கள் முகம் பார்த்து?

இ.பரராஜசிங்கம்,
42,புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(30466)(34-18-16)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 30 - 06 - 1959



மறைவு 07 - 03 - 2004

## திருமதி மைதிலி கலைஅரசன்

இன் சொல் பேசி
இன் முகம் காட்டி
எல்லோர்க்கும் இனியவளாய்
எம்இதயங்களில் நிறைந்திருந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்முடன் இருக்கும்.
*உங்கள் ஆத்மா இறைவன் பாதார விந்தங்களில் நித்திய சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (06. 04. 2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"கலாஞ்சலி", மில் ஒழுங்கை, மல்லாகம்.* - குடும்பத்தினர்.

(30457)(34-18-16)

## சுரேஷுக்கு தேநீர் விருந்து

யாழ்ப்பாணம்,ஏப்.6

பொதுத்தேர்தலில் வெற்றியீட்டிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூகநிலையத்தில் கடந்த சனிக்கிழமை தேநீர்விருந்து அளிக்கப்பட்டது.

மாலை 7.00 மணியளவில் நடைபெற்ற இந்த விருந்துபசாரத்தில் அப பகுதி மக்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (ம-10-7)

## விஞ்ஞானபீட மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் பிற்போடப்பட்ட விஞ்ஞானபீட மாணவர்களது கல்விச்செயற்பாடுகள் முன்னர் அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப் படமாட்டாது என்றும் இம்மாதம் 26 ஆம் திகதியே ஆரம்பமாகும் எனவும் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார். (ம-ரி)

# இரவுப்பணி முகாமையாளர் இரவுப்பணிநிலை அலுவலர்

எழுபதுக்கும் மேற்பட்ட இரவுப்பணியாளர்களை மேற்பார்வை செய்தல், அவர்களின் பணிகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தைக் கவனித்தல் ஆகியனவற்றைத் திறம்பட ஆற்றக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் 45 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இரவுப்பணி செய்வதில் அனுபவம் உள்ளவர்களாகவும் ஒட்டுமொத்த மேற்பார்வைத் திறன் உடையவர்களாகவும் இருத்தல் அவசியம்.

சேவைக்கால அனுபவம், பணிசெய்த நிறுவனம், கல்வித்தகைமைகள், நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

அனுபவம் அற்றவர்களுக்கு மூன்றுமாத காலம் பயிற்சி அளிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள், பூரணமான சுயவிவரங்களுடன்
10.04.2004 இற்கு முன்னர் அனுப்பவேண்டிய முகவரி.:

நிர்வாக முகாமையாளர்,
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி34205)(39-34-18-16)

புதுவருடத்தை முன்னிட்டு

# மாபெரும் மலிவு விற்பனை

மலிவு விற்பனை
மாபெரும் மலிவு விற்பனை

யாழ். மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு! இதோ உங்களுக்காக அதிரடி விலைக் குறைப்பு!

| | | | | |
|---|---|---|---|---|
| சாறி | ப.விலை | ~~1200/=~~ | புதிய விலை | 500/= |
| சாறி | ப.விலை | ~~800/=~~ | பு.விலை | 400/= |
| சல்வார் | " | ~~1100/=~~ | " | 500/= |
| சல்வார் | " | ~~800/=~~ | " | 400/= |
| சல்வார் | " (S) | ~~600/=~~ | " | 350/= |
| ஸ்கேட் | " | ~~450/=~~ | " | 200/= |
| பிளவுஸ் | " | ~~400/=~~ | " | 200/= |
| சேட் (S) | " | ~~290/=~~ | " | 150/= |
| சூட்டிங் | " | ~~460/=~~ | " | 280/= |
| வெல்வெற் துணி | | ~~220/=~~ | | 150/= |
| பிறிண்டெட் துணி | | ~~160/=~~ | | 100/= |
| சில்க் பொலியஸ்ரர் | | ~~65/=~~ | | 50/= |
| பாவாடை பீஸ் | | ~~650/=~~ | | 300/= |

மலிவு விற்பனை
மாபெரும் மலிவு விற்பனை

உடனே விரையுங்கள்! கையிருப்பு இருக்கும்வரை மட்டுமே இந்தச் சலுகை வாய்ப்பு!

முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்

**MAHA SILKS**
மகா சில்க்ஸ்
32, 40A, 41, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.



**BEAUTY SILKS**
பியூட்டி சில்க்ஸ்
69, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகு தரும் ஆடைகளுக்குச் சிறந்த இடம் இதுவே!

C34240(34-18-16)

# பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்திற்குட்பட்ட சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.04.07 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

தகைமைகள்:

01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02) அகவை 18 - 40 வரை இருத்தல் வேண்டும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும்

நாள் :- 2004.04.07 புதன்கிழமை
நேரம் :- காலை 10.00 மணி
இடம் :- 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

* குறிப்பு:-
நேர்முகத் தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

**ஆளுநகை,**
**சந்தைப் பகுதி,**
**யாழ். மாவட்டம்.**

(30472)(40-34-18-16)

# தங்களின் பெருநம்பிக்கை நிறைந்த பேராதரவுக்கு என் உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள்

என் அன்பான யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத் தமிழ்ப் பெருமக்களே!

நடந்து முடிந்த 2004 ஏப்ரல் 2ஆம் திகதிய பொதுத் தேர்தலில் எனக்கும் எங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் அமோக வெற்றியை ஈட்டித்தந்ததற்கும் எம்மோடு இணைந்து அனைத்து வழிகளிலும் செயற்பட்டு ஒத்துழைத்துப் பேராதரவு வழங்கி என்னையும் என்னோடு சேர்ந்த ஏனையவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்க ளாகத் தெரிவுசெய்தமைக்காகவும் கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மாணவிகள், புத்திஜீவிகள், மதகுருமார்கள், சமூகநலத் தொண்டர்கள், பாடசாலை மாணவர்கள், மாணவிகள், இளைஞர்கள், யுவதிகள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகிய அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்!

நீங்கள் வழங்கிய இந்நாடாளுமன்ற உறுப்பினர் பதவியால் எம் மக்களுக்கு ஆற்றவேண்டிய அனைத்துத் தேவைகளையும் சேவைகளையும் முழுமனதுடன் .வேண்டிய காலங்களில் என்னால் இயன்ற வரை ஆற்றுவேன்.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தித் தமிழினம் தன்னாட்சி பெற்றுத் தன்மானத்துடன் சிறப்பாக வாழ்வதற்கு நாம் யாவரும் தொடர்ந்து உழைப்போம்.

நன்றி

**க.சுரேஷ் பிரேமச்சந்திரன் M.A.**
நாடாளுமன்ற உறுப்பினர்,
இணைப்பாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

*கட்டைப்பிராய்,*
*கோப்பாய்.*

(30525)(22-14-16-18)



## கொள்கை மீதான பற்றுறுதி கொண்ட உங்களுடன்.........



**அன்பார்ந்த தமிழீழ மக்களே!**

நாம் எல்லாம் தேசியத் தலைமையின் வழிப்படுத்தலில் ஓரணியில் நின்று எமது கொள்கையின் மீதான பற்றுறுதியை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டியுள்ளோம். அரசியல் ரீதியாக தமிழ்த் தேசத்தின் கரங்களைப் பலப்படுத்தும் பணியினை நிறைவேற்றும் அதேவேளை பெண்களின் குரலை வெளிப்படுத்துவதற்கென ஒரு பெண் பிரதிநிதியையும் அனுப்பிவைப்பதில் குறியாக இருந்த தாய்மார்கள், தந்தையர்கள், சகோதர சகோதரிகள் அக்கடமையை இனிதே நிறைவேற்றியுள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்மினி. சிதம்பரநாதன்

**பத்மினி சிதம்பரநாதன்**
**இலங்கை தமிழரசுக்கட்சி.**

(30522)

## நலன்பெறப் பிரார்த்திப்போம்



முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர்
மாண்புமிகு
**தியாகராசா மகேஸ்வரன்**

அவர்கள் அராஜகர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானதையிட்டு நாங்கள் மிகவும் மனம் வருந்துவதோடு, இந்த அநாகரிகச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். மக்கள் தொண்டனாகிய திரு.தி.மகேஸ்வரன் அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றமைக்காக வாழ்த்துவதோடு, மீண்டும் எம் மக்களுக்குத் தொண்டாற்றும் வல்லமையைப் பெறவேண்டும் என எல்லாம்வல்ல ஸ்ரீ பழனி ஆண்டவரைத் தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய பரிபாலன சபை,
புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்,
தென்னகத் தாரகை விளையாட்டுக் கழகம்,
சாவ.நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

*டச் வீதி,*
*சாவகச்சேரி*

(சி34236)(37-14-18)

## வீடு வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் சகல வசதிகளுமுள்ள பெரிய வீடு வாடகைக்கு வழங்கப்படவிருக்கிறது. விருப்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

விவரங்களுக்கு: ☎ 021 2222537

(30518)(14-18)

## மரண அறிவித்தல்

**சின்னப்பு தர்மராசா**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு தர்மராசா அவர்கள் 02.04.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் 07.04.2004 புதன்கிழமை காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு (கைதடி) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மனைவி சாந்தம்,
மகன் சதீசன்,
மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கைதடி தெற்கு,*
*கைதடி*

(30521)(14-18)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றுகின்ற எமது அன்புக்குரிய திருமதி P.பெனடிற் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி லில்லி கார்த்திகேசு**

அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகக் கவலையடைகின்றோம். அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்தி ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/அ.பொ. வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்*
*நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.*

*யாழ்ப்பாணம்.*

(305223)(37)

## இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்

### நூலகர் தேவை

ஆர்வமுள்ளவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி: 15.04.2004

தலைவர்,
இணுவில் பொதுநூலகம்,
இணுவில்

(C/34249)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான நம்பர்-1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 07.04.2004 நாளை மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:2867, 3529, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (30497)

திருமகள் வீதி, அரியாலையில் 2¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. வளவில் தென்னை மரங்களுமுண்டு. தொடர்பு: இல:104, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 622 1769. (30508)

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையில் சண்முகநாத மகாவித்தியாலயததுக்கு அருகில் 9 பரப்புக் காணியில் அமைந்த வீடும், 5பரப்புக் காணியில் மற்றொரு வீடும், வித்தியாலயததுக்கு மேற்குப் பக்கத்தில் 2½ பரப்பு வளவும் விற்பனைக்குண்டு (இரண்டு வீடுகளுக்கும் தண்ணீர்த் தாங்கிவசதி, வீட்டுடன்/ வெளியே மலசலகூடம், குளியலறைகள்) தொடர்பு: அஞ்சலோ, வசந்தா ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை. (30513)

நல்ல நிலையிலுள்ள எவரி தராசும் (5 அந்தர்) கல்வனைஸ் தட்டுக்களும் (றே) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.சண்முகநாதன், இல.14, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (30505)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 இல் பிறந்த, சதய நட்சத்திரம், லண்டனில் பிரஜாவுரிமைபெற்று தொழில்புரியும் படித்த மணமகனுக்கு நல்லொழுக்கமும், பண்பும் கொண்ட படித்த, அழகிய, 26 வயதுக்குட்பட்ட மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். புகைபடம், ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விள.இல.: 2218, மே/பா உதயன். (30514)

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய பாசமுள்ள நண்பர்
பிரபல கிறஷர் மெக்கானிக்
**மோகனதாஸ் (மோகன்)**
*அவர்களின் அன்புத் தந்தையார்*
*காளிகோயிலடி, மல்லாகத்தைச் சேர்ந்த*

## நாகமுத்து கணேஸ்

அவர்கள காலமானதையிட்டு நாம் ஆழ்நத வேதனையுறுகின்றோம். அவரைப் பிரிந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணர் அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடையக் காளிஅம்பாளின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

(30516)(34)

- அன்பு நண்பர்கள்.

# நெஞ்சகலாத நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு



## அமரர் வைரவி கந்தசாமி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02-07-1945 | 19-03-2003 |

ஆறாம் ஆண்டு



## பன்னீர்கரம் மதிவதனா

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 25-02-1975 | 12-02-1998 |

*வருடங்கள் பல கடந்தாலும்*
*மாறுமா உங்கள் முகம்*
*நாம் புமியில் வாழும்வரை*
*எங்கள் உள்ளங்களில் உங்கள் நினைவுகள்*
*என்றும் நிலைத்திருக்கும்*

16/4, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(30478)(30-21-19-16)

தகவல்: **மனைவி யோகேஸ்வரி,**
யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# தற்காலிக இடம் மாற்றம்

## ஏசியனற் பெயின்ற் (லங்கா) லிமிட்டெட் ஸ்தாபனம் (யாழ் விநியோக நிலையம்)

**100A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மேற்படி நிறுவனம் தற்பொழுது தற்காலிகமாக 10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், முட்டாஸ்கடை சந்திக்கு அருகில் (விவேகானந்தா அச்சகத்துக்கு முன்பாக) தற்காலிகமாக இயங்கி வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

உரிமையாளர்கள்,
**யாழ்ப்பாண இரும்பகம்.**

*10/11 ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P: 021-2227028*

(சி-34078)(21-14-19)

# மரண அறிவித்தல்

## திருமதி லில்லி கார்த்திகேசு

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லி கார்த்திகேசு அவர்கள் நேற்று (05.04.2004) திங்கட்கிழமை கிறீஸ்துவுக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் மேரிதிரேசா (ராசா), காலஞ்சென்ற டெய்சி, லீலா, ஜெயராஜசிங்கம் (I.C.C. கொழும்பு), வெனிசியா, குலநாயகி (சின்றெல்லா - P.H.M- M.O.H. கந்தோர், மானிப்பாய்), அரசகுலசிங்கம் (U.N.H.C.R, வவுனியா) ஜெயசீலி, போஷியா (போதனா வைத்தியசாலை - யாழ்), பற்றீஷியா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்வம், சின்னத்தம்பி, கிருபைநாயகம் (ஆசிரியர்) மற்றும் ராஜரட்ணம் (கொழும்பு), எமிலின் ஜெயராஜசிங்கம் (கொழும்பு), இராசையா (கொழும்பு), தம்பையா (உடுவில்), ராணிவைலற் (கொழும்பு), வில்பிறட் (யாழ் மாநகரசபை), பெனடிக்ற் (கிறீஸ்தவ ஐக்கிய வைத்தியசாலை ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (06.04.2004) செவ்வாய்க்கிழமை பி.ப 3மணிக்கு அன்னாரின் இல்லம் "கொக்கொஸ்கொட்" ஆக் வீதி, உடுவிலில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக மல்வம் அப்போஸ்தர சபை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்கொஸ்கொட்,*
*ஆக் வீதி,*
*உடுவில்.*

(30506)(21-14-16)

தகவல்:
கா.ஜெயராஜசிங்கம் (மகன்),
கா.அரசகுலசிங்கம (மகன்).




# முதலாவது அகவை பூர்த்தி



## 06.04.2004

# தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய்




## NSB தரும்

- ★ உயர்ந்த வட்டி வீதம்
- ★ அரச உத்தரவாதம்
- ★ கணனிமயப்படுத்தப்பட்ட துரிதசேவை
- ★ எல்லா சேமிப்புக் கணக்கிற்குமான இலவச ஆயுட்காப்புறுதி
- ★ சகல வயதுப் பிரிவினருக்குமான சேமிப்புக்கணக்குகள் (தினசரி மீதிக்கு வட்டி கணிப்பீடு
- ★ நிலையான வைப்புக்கணக்குகள்
- ★ பல லட்சம் ரூபா வென்றிட அதிர்ஷ்டலாபச் சீட்டு (ரிதிரேகா)
- ★ அறக்கொடைத்திட்டம்.

## NSB தரும்

- ★ நன்கொடைச் சீட்டு
- ★ வைப்புக்கடன்களுக்கு எதிரான கடன் வசதிகள்
- ★ ஏனைய கடன் வசதிகள்
- ★ 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு விசேட மாதவட்டி தரும் நிலையான வைப்புக்கணக்குகள்.
- ★ தேசிய சேமிப்புச் சான்றிதழ்
- ★ பிரார்த்தனா சான்றிதழ்கள் (சிறுவர்களுக்கு)
- ★ பிறன்ஸ் கணக்கு (ஓய்வூதியம்)
- ★ தங்க ஆபரண அடகு கடன் வசதி
- ★ கணனி மூலமான பரிசோதனை
- ★ மீளப்பணத்தினைப் பகுதி பகுதியாகச் செலுத்தும் வசதி
- ★ மொத்தப் பெறுமதியில் 80% மான கடன் வசதி
- ★ கடனுக்குக் குறைந்த வட்டி

(சி34082)(37)

## ஆவது

எமது கிளை தனது முதலாவது அகவையினை 06.04.2004 இல் (செவ்வாய்க்கிழமை) பூர்த்தி செய்கின்றது.

அதற்கு எல்லாவகையிலும் ஒத்தாசை வழங்கிய எமது சொத்தாகிய அன்பு வாடிக்கையாளர்களுக்கு நாம் உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமையடைகின்றோம்.

தொடர்ந்தும் நாம் பல வெற்றிகளைப் பெற்று வீறுநடைபோடுவதற்கு வாடிக்கையாளர்களாகிய நீங்கள் உங்களது நண்பர்களையும், உறவினர்களையும் எமது வங்கிச்சேவையில் இணைத்து அனைவரது உயர்ச்சிக்கும் உங்களது ஆதரவைத் தொடர்ந்து நாடி நிற்கின்றோம்.

NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி
மானிப்பாய்




*மலர் ஆக்கம் செ.ரமேஷ் J.P. நவாலி.*

**சிறுதுளி பெருவெள்ளம் என சேமித்து நன்மை பெற வாரீர்**

NSB



# விடுதலை உணர்வுகளை சுமந்து வாழும் எமது உறவுகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்



**தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தின் அரசியல் பலத்தினை மீண்டும் ஒரு முறை உலகிற்கு நிரூபித்துக்காட்டிய எமது நேசத்துக்குரிய மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக எனது உள்ளம் நிறைந்த நன்றிகள்**

உங்கள் வாக்குகளை எனக்கு வழங்கி அதி உன்னத வெற்றிக்கு இட்டுச் சென்ற நீங்கள் அனைவரும் காட்டிய அந்த மகோன்னத ஆதரவுக்கு எனது நன்றி.

இந்த வெற்றி தனிப்பட்ட கஜேந்திரனுக்குக் கிடைத்த வெற்றி அல்ல

- ★ தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டம் என்ற எமது நிலைப்பாட்டிற்கு -
- ★ தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் இனத்தின் ஏக பிரதிநிதிகள் என்ற எமது நிலைப்பாட்டிற்கு -
- ★ தமிழ் இனத்தின் தன்நிகர் இல்லாத தலைவன் மேதகு வே.பிரபாகரன் என்ற எமது நிலைப்பாட்டிற்கு -
- ★ இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் ஏற்று அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டிற்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

இந்த மாபெரும் வெற்றிக்கு தோள்கொடுத்த யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தினர், உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், யாழ். மாவட்ட மாணவர்கள், யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினர், ஆசிரிய சமூகத்தவர்கள், பல்வேறு திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்.மாவட்ட பொது அமைப்புகள், பல்வேறு கிராமிய அமைப்புகள், இளைஞர்கள், யுவதிகள், விளம்பரம் மூலம் அனுசரணை வழங்கிய புலம்பெயர்ந்த மக்கள், மாணவர்கள் மற்றும் யாழ். தேர்தல் மாவட்ட வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

"எமது மக்களின் விடுதலைக்காக இறுதிவரை
உறுதியோடு உழைப்பேன் என உறுதியளிக்கிறேன்"

(C/34092)(22-11-12) **- செல்வராஜா கஜேந்திரன்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களான
திரு.திருமதி
இராசரத்தினம்-மேரி ஜெசிந்தா
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**திரு. இராசரெத்தினம் ஜெயால்ட் அன்ரனி**

(B.B.A.) அவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 27.03.2004 சனிக்கிழமை நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி (B.B.A.)பட்டம் பெற்றமையையிட்டு நாம் பெருமகிழ்வுடன் பாராட்டுகின்றோம். இவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சறப்புற்று நீடுழிகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*வேலணை மேற்கு,*
*வேலணை - 06* (30532)(22-12-14) **வேலணையூர் உறவினர்கள்**

## வான் விபத்தில் சிறுமி உட்பட 5 பேர் காயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.6

கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வான் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 11வயதுச் சிறுமி உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி அலுக்கைச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. குடும்பமாக செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் வீட்டிற்கு அண்மையாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அளவெட்டி மத்தி அளவெட்டியைச் சேர்ந்தவர்களான ஹயஸ் வானின் சாரதி ஏ.பரமநாதன் (வயது45), பரமநாதன் வத்சலா (வயது 40), பரமநாதன் நர்த்தனன் (வயது12), தவேந்திரன் சுபேனா(வயது(11), வேலாயுதபிள்ளை வனஜசுலோஜினி (வயது64) ஆகியோரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் இவர்கள் தலை, கால், கைகளில் படுகாயமடைந்தனர்.

ஹயஸ் வானின் ஸ்ரேரிங் திடீரென செயலிழந்தமையே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-6)

## திருத்தப்படாத நிலையில் வீதி

யாழ்ப்பாணம்,ஏப்.6

இருபாலை புதிய செம்மணி வீதி - ஆனந்தபுரம் வீதி கடந்த 28 வருடங்களுக்குமேல் திருத்த வேலை எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு உதவாத நிலையில் இருந்து வருகிறது. சுமார் 350இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் பாவனையில் உள்ள ஒரேயொரு வீதியான இதனைத் திருத்த பல தடவை பிரதேச சபையுடன் தொடர்புகொண்டும் இதுவரை காலமும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கிருந்து அயலூர்களில் கல்வியைத் தொடரும் சுமார் 650 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த வீதியால் சைக்கிள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில், வேறு வாகனப் போக்குவரத்தும் அற்று சுமார் மூன்று மைல் தூரம் நடந்து சென்றே தமது கல்வியைப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

(ம-15)


**Short Course: Dip. in Hardware Technology**

Period- 09 days (Full Time)
Time 09.30 - 16.30

Only 10 Participant in a Group

Application Software and Operating System
Hardware Installation
Trouble Shooting
I/O Devices
Hard disk Installation
Windows 95 to XP
Installation LAN and WAN
Printers, Untiviruse

* ஆரம்பம்: 10/04/2004 காலை 9.00

ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளுங்கள்

ஆக 9 நாள்களில் நீங்களும் சிறந்த Hardware Technician ஆகுங்கள்

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674


## ஒருவருட நினைவுகளுடன்.....

மலர்வு 23 06 1965



உதிர்வு 18 03 2003

அமரர்
**கிருஷ்ணபிள்ளை ஸ்ரீதரன் (சிந்து)**

வாழ்க்கைப் பயணத்தை முடித்து நீர் சென்றுவிட்டீர்
ஒரு வருடமாய் உம் நினைவலைகளை - எம்
நெஞ்சம் எனும் கருவறையில் தெய்வமாய் சுமந்து
இன்றும் என்றும் வாழும்..........

*...த்தோட்டம்,*
*தெல்லிப்பழை.* (30527)(37) **- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### அன்னதானம் அல்பிரட் அருட்பிரகாசம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்னதானம் அல்பிரட் அருட்பிரகாசம் 30.03.2004 அன்று டென்மார்க்கில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் எலிசபெத் ஞானதீபம் அவர்களின் அன்புக் கணவரும் அன்னதானம் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் செபரத்தினம், காலஞ்சென்ற தேவபிரகாசம் மற்றும் ஜெகப்பிரகாசம், தவப்பிரகாசம், இன்பரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சின்னத்துரை - நேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கிறிஸ்ரி அருள்ராஜ் அவர்களின் அன்புத் தகப்பனாரும் ஜெயந்தியின் அன்பு மாமனாரும் அபித்தா, கிறிஸ்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (07.04.2004) புதன்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 4 மணிக்கு டென்மார்க்கில் நடைபெறும். அத்தருணம் அவரது சகோதரன் தவப்பிரகாசத்தின் ஏழாலையிலுள்ள இல்லத்தில் அன்னாரின் நினைவாக நன்றி செலுத்தும் ஆராதனை ஒன்று நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*பிள்ளையார் கோவிலடி,*
*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.* (30531)(40-13-14)

தகவல்:
தவப்பிரகாசம்
(சகோதரன்)


25 ANNIVERSARY

**250 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்**

பாடக் கட்டணம் முற்றிலும் இலவசம்
அனுமதிக்கட்டணம் மட்டும் 1250/-

Diploma in Ms office XP (4months)
Diploma in Computer studies (6months)
Diploma in Computer Science (4months)

Kids ... (10-18 வயது)
... மாணவர்களுக்கான விடுமுறைக்கால பயிற்சி

... குறைந்த கட்டணத்தில்
... நெறிகள்

- Diploma in Computer Programming
- Diploma in DeskTop Publishing
- Advance Diploma in Computer Science
- Diploma in Network Engineering
- Diploma in AutoCAD 2000
- Diploma in $C^{++}$
- Diploma in Hardware Engineering
- Diploma in Accounting Package

பிரிவு II ஆரம்பம் 06,10.04.2004

**JAFFNA TECHNICAL INSTITUTE.**
**JAFFNA SRI LANKA.**

No7 Palaly Road,
Jaffna.(ஆரியகுளம் சந்தியருகில்)

T.P :- 0777-292127

## தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.

1) பிறின்ரர் - முன்அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2) இரவு நேரப் பாதுகாவலர் - 20 - 50 வயதுக்குட்பட்டோர்

**மூர்த்தி வீடியோ அன் கலர் லாப்**
யாழ்.வீதி, மானிப்பாய். (C/34076)(38-12-17)


## பகிரங்க ஏல விற்பனை

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பின்வரும் விவரங்கள் கொண்ட பாவித்த மோட்டார் சைக்கிள்கள் பகிரங்கமாக ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

விவரம்

| இனம் | தமிழீழப் பதிவு இல. | ஸ்ரீலங்கா பதிவு இல. |
|---|---|---|
| M.D. 90 | த 13-0870 | 154 - 2963 |
| C.D. 70 | த 12-3411 | 83ஸ்ரீ 5397 |

நாளை (07.04.2004) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு மருதங்கேணியில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் ஏல விற்பனை நடைபெறும். ஏலத்தில் கலந்துகொள்வோர் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 500.00 செலுத்துதல் வேண்டும். மோட்டார் சைக்கிளைப் பார்வையிட விரும்புவோர் சங்கக் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
வடமராட்சி கிழக்கு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
மருதங்கேணி, தாளையடி. (C/34088)(38-12-17)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## நெஞ்சைவிட்டகலாத மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 01 - 1924



உதிர்வு 09 - 04 - 2001

### திருமதி ஆசைப்பிள்ளை இராசம்மா

திதி: 06.04.2004 செவ்வாய்க்கிழமை

*ஆண்டுகள் மூன்று கழிந்தாலும் மூண்டதுயர்*
*மாறுமோ, ஆறுமோ அன்புத் தெய்வமே, அன்பு அம்மாவே!*

ஆண்டுகள் பல ஓடினாலும் அழியாது
அம்மா உங்கள் நினைவு
உங்களை இழந்த அன்றே ஆறாத்துயரில்
ஆனோம், அழுது தவிக்கிறோம்
அன்புத் தெய்வமே அன்பு அம்மாவே!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
"திருமகள் வாசம" நிகரை வீதி, சங்கானை.
தொலைபேசி- 0602- 212399 / 0602-212418

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(30539)(40-12-17)

### மின்மாற்றி பொருத்தப்பட்டது

கோண்டாவில் - இருபாலை வீதி இராஜவீதிச் சந்தியில் மின்மாற்றி ஒன்று புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

இதனால், குறித்த சுற்றாடல் பகுதியில் போதிய வலுவுள்ள மின்சாரம் கிடைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)


கொம்பியூட்டர்
பொலீமர்
இறபர் முத்திரை

**இலவசம்**

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு

யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(30331)(38)

**இணைந்த கணிதம் (2005/2006)**

அதிக பயிற்சிகளுடன்
பிரத்தியேகமாக வீடுகளுக்கு
வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:-T.தீபன்
T.P 077 - 6101876
(30517)(38)

**லக்சுமி** இணுவில்



விஜய், தேவயானி
வடிவேலு, சூரியா
நடித்த
ப்பிரண்ட்ஸ்
காட்சிநேரம்: 11.00, 3.00, 6.30 (பி.நே.)
(30538)(12)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

அஜித், சிம்ரன் நடித்த
உன்னைக் கொடு என்னைத் தருவேன் (ரீகல்)



காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
Maid in Manhattan
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
(C/34770)(12)

**ராஜா யாழ்ப்பாணம்**

பிரபு, ரம்பா நடித்த
பந்தா பரமசிவம் (ரீகல்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C/33519)(12)

**நாகம்ஸ் சுன்னாகம்**

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடிக்க
A.R.ரஹ்மானின் இசையில்....



தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பி.ப நேரம்)
(C-34180)(12)


# 13 ஆவது நாடாளுமன்றத்திற்கு பெண் எம்.பிக்கள் 10 பேர் தெரிவு

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 10 பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:-

1)பத்மினி சிதம்பரநாதன் (தமிழரசுக் கட்சி - யாழ்ப்பாண மாவட்டம்), 2)தங்கேஸ்வரி கதிர்காமன் (தமிழரசுக் கட்சி-மட்டக்களப்பு மாவட்டம்), 3)சந்திராணி பண்டார (ஐக்கிய தேசிய முன்னணி - அநுராதபுர மாவட்டம்), 4)லொறின் பெரேரா (புத்தளம் மாவட்டம்), 5)அமரபியலி ரத்னாயக்க (ஐக்கிய தேசிய முன்னணி - குருநாகல் மாவட்டம்) 6)பவித்ரா வன்னியாராச்சி (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு - இரத்தினபுரி மாவட்டம்), 7)பேரியல் அஷ்ரப் (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு -அம்பாறை மாவட்டம்),8)அஞ்சன் உம்மா (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு -கம்பஹா மாவட்டம்),9)சுஜாதா அலஹகோன்(ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு-மாத்தளை மாவட்டம்), 10)தலதா அத்துக்கோரள (ஐக்கிய தேசிய முன்னணி-இரத்தினபுரி மாவட்டம்).

(க)


**வீட்டுச் சுத்திகரிப்பாளர் தேவை**

வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கும் வீட்டைச் சுத்திகரிப்பதற்கு ஓரளவு ஆங்கிலம் தெரிந்த வீட்டுச் சுத்திகரிப்பாளர் தேவை. நேர்முகப பரீட்சை 07.04.2004 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

தொடர்பு:
றொன்கோ,
இல.06, கடைச்சாமி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (30537)(38)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லுடைக்கும் ஆலையின்
தொழில்நுட்பவியலாளர்
**மோகனின்** பாசமிகு தந்தையாரான
**நாகமுத்து கணேஸ்** அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிபதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஈஸ்வரன் கல்லுடைக்கும் ஆலை,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

பிள்ளையார் கல்லுடைக்கும் ஆலை,
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

தகவல்:
ஐ.இராமச்சந்திரா, க.மகாலிங்கம்,
ந.யோகராஜா (சாந்தன்).

(30541)(38-12-17)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து கணேஸ்

(பிரபல கிறசர்மெக்கானிக்- மல்லாகம்)



மல்லாகம் காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.1201 காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கிறசர் மெக்கானிக் நாகமுத்து கணேஸ் நேற்று (05.04.2004) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்து - சின்னம்மாவின் அன்பு மகனும் கந்தசாமி, தங்கம்மா குமாரசாமி (பொன்னர்), பாலசிங்கம் (காந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் மோகனதாஸ் றஜனி, லோகினி, பிரேமதாஸ் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பாலச்சந்திரன், ஜெகநாதன், கௌரி -ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜீபன், துளசிகா, விதுர்ஷன், வேணுஷன், மதுசனா, ஜானுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.04.2004) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் வண்ணார்பண்ணையிலுள்ள "பூம்பொழில்" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*'பூம்பொழில் இல்லம்'*
*இல.1201, கே.கே.எஸ். வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
*T.P .- 0777 149249* (30515)(40-12-17)

தகவல்:
க. மோகனதாஸ்
(மோகன் - மகன்)

### திருமதி ஜினதாசா பாக்கியம்

அல்வாய் கிழக்கு (தெருமூடி மடத்தடி) திருமதி ஜி.பாக்கியம் (ஓய்வுபெற்ற ஊழியர், மந்திகை வைத்தியசாலை ) அவர்கள் நேற்று (05.04.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி சாந்தரூபினி, தேவராஜா, ஜீவராஜா, பாக்கியராஜா, இராஜகருணா ஆகியோரின் தாயாரும் ஞானச்சந்திரன், மல்லிகாதேவி, பவானி, சாந்தமலர், பாக்கியம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.04.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கருகம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.ஞானச்சந்திரன்
(மருமகன்)
கிராமஅலுவலர், மந்திகை.

(C-34092)(38-12-17)

### சங்கரப்பிள்ளை விஜயலட்சுமி

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை விஜயலட்சுமி நேற்று (05.04.2004) திங்கட் கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் (அப்பையா உபாத்தியார்)- தங்கம்மா தம்பதிகளின் மூத்த மகளும் நாகரத்தினத்தின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2004) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குருந்தடி லேன்,*
*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

(30544)(40-12-11-17)

தகவல்
ச.நாகரத்தினம்.
(சகோதரி)


**New Year Special Offer 05 to 30 April , 2004**


**3 Years Limited Warranty**

| | | |
|---|---|---|
| Processor Intel. | Intel Celeron 2.0Ghz | Rs.47,750.00 |
| ASUS Mother Board. | Intel P4 2.0GHz | Rs.53,750.00 |
| Kingston Memory 128MB. | Intel P4 2.8GHz | Rs.57,750.00 |
| ViewSonic Monitor E55C. | Intel P4 3.0GHz | Rs.79,000.00 |
| ASUS VGA 64MB Upgraded. | *Kingston Memory Lifetime Warranty | |

Keyboard PS/2. Mouse PS/2.
FDD, HDD 40GB. P4 ATX Casing.
ASUS CDROM 52X.
ASUS Soundcard. Speaker.



*We are Selling Printer, Scanner, UPS, & Computer, Network Accessories..



HP Deskjet 3535 color inkjet printer
Specification
* Up to 14 ppm black * Up to 10 ppm color
* Up to 2400-optimized dpi color (up to 2400 x 1200-optimized dpi color and 1200-input dpi)
* Up to 1 input trays * Holds up to 100 sheets * None (not supported)

Price: SL Rs: 5,750.00 * *Special Discount for Dealers**

Authorized Reseller: *Global Informatics (Pte) Ltd*

*Global Informatics (Pte) Ltd.*
**#379, Kasthuriyar Road.**
Tel :077 736 4247, 077 748 9361, 021 222 5736.

# மட்டக்களப்பு கூட்டமைப்பு....

(முதலாம் ப்க்கத் தொடர்ச்சி)
கள் அர்ப்பணிப்புடன் உழைப்பார் கள் என்றார்.

புதிய அரசு சமாதானப் பேச் சுக்களுக்கு அழைத்தால் போவீர்களா? என்று கேட்டபோது, அந்த அழைப்பு அனுசரணையாளர்கள் மூலம் வர வேண்டும். வந்தால் பார்க்கலாம் என்ற தோரணையில் பதில் அளித்தார் தமிழ்ச செல்வன்.

அவரிடம் கேட்கப்பட்ட மற்றும் கேள்விகளும் அவர் அளித்த பதில் களும் வருமாறு:-

*கேள்வி:-* ஐ.தே.க. அரசுடன் பேச்சு நடத்தியது போன்று புதிய அரசுடன் பேச்சுக்களைத் தொடாவீர்களா?

*பதில்:-* எம்மைப் பொறுத்தமட் டில் நிதானமாக நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். தெற்கில் யாரும் ஆட்சி அமைக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. இருதரப்பினரும் சிறு பான்மைக் கட்சிகளோடு தொடர்பு களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின் றன.

யார் ஆட்சி அமைப்பார்கள் என் பது கேள்விக்குறியாக இருக்கும் நிலையில் நாங்கள் தற்சமயம் எந் தத் தீர்க்கமான முடிவையும் எடுக்க வில்லை. நிச்சயமாக தமிழ்மக்களின நலன்கள், எதிர்காலம் ஆகியன தொடர் பாகத் தீர்க்கமான முடிவை எமது தலைமை எடுக்கும். தற்போது சூழ நிலையை அவதானித்துக் கொண்டி ருக்கின்றோம்.

*கே:-* ஆட்சி மாற்றம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன?

*ப:-* தெற்கில் யார் பலமான ஆட் சியை அமைக்கிறார்கள் என்பதைப் பார்த்துத்தான் எமது முடிவை எடுப்போம். எப்படியான ஆட்சி அமை யும் என்பதை கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

*கே:-* பேச்சுக்களை மீள ஆரம்பிப் பது தொடர்பாக ஜனாதிபதி சந்தி ரிகா தரப்புத் தொடர்பு கொண்டுள் ளதா?

*ப:-* இதுவரை எந்தத் தொடர்பை யும் ஏற்படுத்தவில்லை. பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தொடர்புகளை யும் எவரும் எம்முடன் ஏற்படுத்த வில்லை.

*கே:-* தேர்தலுக்கு முன் சந்தி ரிகா தரப்பு விடுதலைப்புலிகளுடன் ஏதாவது தொடர்புகளை வைத்ததா?

*ப:-* தேர்தலுக்கு முன் அவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ள முயன்றி ருக்கின்றார்கள் பல பக்கங்களால் முயற்சிகள் எடுத்தார்கள்.

பேச்சுக்களாக இருந்தால் என்ன சமாதான முன்னெடுப்பாக இருந்தால் என்ன அனுசரணையாளர் ஊடாகவே அது இடம்பெறும். இதில் நாம் மிக வும் உறுதியாக இருக்கின்றோம்.

*கே:-* தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் எப்படிச் செயற்ப டும்?

*ப:-* கூட்டமைப்பினர் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்துள்ள னர். தமது நிலைப்பாட்டைத் தெளி வாக வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளை ஏகப் பிரதி நிதிகளாக ஏற்றுக்கொண்டு விடுத லைப் புலிகளுடன் பேசி தமிழ மக் களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக்காணவேண்டும். என்றும் இடைக்கால நிர்வாக சபை - குறித்து முடிவு செய்யவேண்டும் என்றும் தமிழ்க் கூட்டமைப்பினர் தேர்தல் பிரகடனத் தில் கேட்டிருந்தனர். அதற்கு மக் கள் ஏகோபித்த அளவுக்கு என்று மில்லாதவாறு ஆணையை வழங்கி யிருக்கிறார்கள். இதை சகல தரப்பி னரும் புரிந்துகொள்வர் என நினைக் கிறேன்.

*கே:-* விடுதலைப் புலிகள் முன் வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்கக் கூடாது என்று ஹெல உறுமய நிபந்தனை விதித்து அரசுக்கு ஆதரவு வழங்க முடிவு செய்துள்ளது. இத்தகைய நிபந் தனையுடன் அரசுக்கு ஹெல உறுமய ஆதரவு வழங்குவதால் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் பேச்சு இடம் பெறும் என நம்புகிறீர்களா?

*ப:-* இது பற்றி அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். எம்மைப் பொறுத்தவரை தமிழ்மக்கள் தெளி வான ஆணையை வழங்கியிருக்கிறார் கள். தெளிவாக ஒரு செய்தியை சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எமது மக்களின் எதிர்காலம், நலன்கள், என்ற அடிப்படையில் எமது தலைமை முடிவை எடுக்கும். அந்த அடிப்படை யில் தமிழ்க் கூட்டமைப்பும் ஆதரவை யும் ஒத்துழைப்பையும் வழங்குமென நம்புகிறோம்.

*கே:-* போர்நிறுத்த உடன்பாட் டின் நிலை?

*ப:-* சர்வதேச அனுசரணையாளரின் பங்கோடு போர்நிறுத்த உடன்பாடு உருவாக்கப்பட்டது. அதனால்தான் யுத்தநிறுத்தம் செம்மையாக நடை முறைப்படுத்தப்படுகின்றது. யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் செம்மையா கவும், சீராகவும் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் எவர் ஆட்சிப் பீடம் ஏறினாலும் அதை முழு அளவில் ஏற்கொள்ள வேண்டும்.

*கே:-* போர் நிறுத்த உடன்பாட் டில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என ஜே.வி.பி. கூறுகின்றது. அப்ப டியானால் உடன்பாட்டில் மாற்றம் செய்ய நீங்கள் தயாரா ?

*ப:-* கடந்த இரண்டரை வருடங் களாக இலங்கைத் தீவில் மக்கள் அமைதியை அனுபவிக்கிறார்கள். அபிவிருத்தியையும் முன்னேற்றத் தையும் அனுபவிக்காவிட்டாலும் அமை தியை அனுபவிக்கிறார்கள். இதற்கு அடிப்படை இந்த யுத்தநிறுத்தம் தான்.

இந்த யுத்தநிறுத்தத்தில் கைவைத்து அதில் குழப்பங்கள் ஏற் படுத்த மீண்டும் இந்த அமைதியைக் குலைக்க முனைவதை எந்த மக்களும விரும்ப மாட்டார்கள் என்றே நாம் கருதுகின்றோம்.

*கே:-* யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பீர்களா?

*ப:-* நிச்சயமாக தொடர்ந்து யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்போம். அதில் எந்த வித மாற்றமும் இருக் காது.

*கே:-* கருணாவின் நிலைப்பாடு குறித்துத் தாங்கள் எந்த நடவடிக்கை எடுக்கிறீர்கள்?

*ப:-* கருணா மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறார். எமது இயக் கத்தின் ஒழுங்கு முறைப்படி இன் றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நிதானமாகச் சில நடவடிக கைகளை எடுத்துக்கொண்டு வரு கிறோம் மிகவிரைவில் அதற்கான தீர்க் கமான முடிவுகளை எட்டி விடுவோம் எனக்கருதுகின்றேன்.

*கே:-* மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி சார்பாகத் தெரிவான எம்.பிக் களை சந்திரிகாவுக்கு ஆதரவாகச் செயற்படுமாறு கருணா வற்புறுத்து வதாகச் செய்திகள் வருகின்றன. அது குறித்து.....?

*ப:-* இது அவ்வளவு சாத்தியமான தாக இருக்குமென நாம் நம்பவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதனை பிரகடனம் செய்து வாக்குறுதியைக் கொடுத்து மக்களிடம் வாக்குக் கேட டார்களோ அந்த அடிப்படையில்தான் மக்கள் வாக்களித்துள்ளார்கள். அந்த மக்கள் தமிழத்தேசியத்தின் தலை மையில் தமிழ் தேசியத்தை ஏற்றுக் கொண்டு, தமிழ்மக்களின் எதிர்காலத் துக்காக முன்னெடுக்கப்படும் அனைத் துப் பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதாகத்தான் வாக்களித்துள் ளனர். அந்த அடிப் படையில்தான் மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்துள ளனர். கருணாவின் பிரதேச வாதத் துக்கும் அவரது மோசடிகளுக்கும் துணை போவதற்கு இவர்களை மக் கள் தெரிவுசெய்யவில்லை. அந்த அடிப்படையில் அவர்கள் தமிழ் தேசி யத்துக்கு அர்ப்பணிப்புடன் உழைப் பார்கள் என்றே கருதுகிறேன்.

*கே:-* மட்டு - அம்பாறையிலிருந்து போராளிகள் வன்னிக்கு வருகிறார் களா?

*ப:-* நிறையப் போராளிகள், பொறுப் பாளர்கள் எனப் பெரும் அளவில் வந்துகொண்டிருக்கிறார்கள். யார் யார் வருகிறார்கள் என்ற தகவலை விரைவில் வெளியிடுவோம். சில நட வடிக்கைகளை மேற்கொள்வதால் பெயர் விவரங்களை வெளியிட விரும்ப வில்லை.

*கே:-* மட்டக்களப்பிலிருந்து யாழ்ப பாணத்தவர்கள் வெளியேற்றப் பட்டு இக்கட்டான சூழ்நிலை அங்கு நிலவு கிறது. அதுபற்றி...?

*ப:-* இது கருணாவின் காடைத்த னம். அவரின் வெறித்த னமும், பிர தேசவாத துவேசமும் தான் இதற் குக் காரணம் அவரின் காடையர்களால் இது நடத்தப்படுகிறது. இதை மட்டக் களப்பு மக்க ளோ வேறு எவருமோ விரும்பவில்லை. யாழ்ப்பாணத்த வரை வெளியேற்றியது மட்டுமல்லாமல், அங்குள்ள தேசியப்பற்றுள்ள, தேசப் பற்றுள்ள உணர்வுள்ள எல்லோரை யும் அச்சுறுத்தித் தாக்கியும் வருகி றார். பல்வேறுபட்ட நிகழ்வுகள் அங்கு நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றுக் கெல்லாம் கருணாதான் காரணம்.

மிகவிரைவில் நிச்சயமாக அவரை எமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வந்தவுடன் மக்கள் மீள நிம்மதிய டைவர்.

-இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரி வித்தார். (க)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வனுடன் கலந்துரையாடினார். சேனாதிராஜாவுடன் மற்றொரு நாடாளு மன்ற உறுப்பினரான ஜீ.ஜீ கஜேந் திரகுமாரும் கலந்துகொண்டார். தமிழ்ச் செல்வனுடன் துணை அரசியல் துறைப பொறுப்பாளர் சொ.தங்கன், நீதிநிர் வாகத்துறைப் பொறுப்பாளர் பரா ஆகி யோரும் உடனிருந்தனர். (ஒ-3)

# சு. கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருகின்றோம் என்றும் பிரதமர் கூறினர்.

ஏப்ரல் 2 நடைபெற்ற நாடாளு மன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள் அனைத்தும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை இன்று அரசாங்க வர்தமானியின் மூலம் பிர கடனப்படுத்தப்படும்.

அதன்பின்னரே நாடாளுமன்றத் தில் பெரும்பான்மை உள்ள கட்சியை அரசாங்கத்தை அமைக்கும் படி கோர வேண்டும். வெளிவந்துள்ள தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் எந்த ஒரு கட்சியும் தனிப் பெரும்பான்மை யைப் பெறவில்லை.

ஆனால், ஜனாதிபதி அரசமைக் கும் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கும் மாறுபட்ட வகையில் சிறுபான்மைப் பலத்துடனான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியை ஆட் சியில் அமர்த்துவதற்கான முயற்சி களில் ஈடுபட்டுள்ளார். இவர்களால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இ.தொ. கா.,முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின ஆதரவு உண்டு. அமைச்சர் ஆறு முகன் தொண்டமானுடன் நேற்று இரவு பேச்சு நடத்தினேன். இன்றும் பேசுகின்றோம். அதேபோன்று அமைச் சர் ரவூப் ஹக்கீமுடனும் பேசவுள் ளோம். அவர் கொழும்பு திரும்புகின் றார். இவ்விரு அமைச்சர்களும் சுதந் திரக் கூட்டமைப்புடன் இணைய மாட்டார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பெரும் வெற்றியீட்டிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவும் ஐக்கிய தேசிய முன்னணிக்கேயுண்டு. இதே வேளை, தேசிய ஹெல உறுமயவுட னும் பேசிவருகின்றோம். எனவே நாடாளுமன்றத்தில் தமக்குப் பெரும் பான்மை உண்டு என்று சுதந்திரக் கூட்டணியால் நிரூபிக்கமுடியாது

ஜனாதிபதியினால் அமைக்கப் படும் சிறுபான்மை அரசாங்கம் நாடா ளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறினால் 1960ஆம் ஆண் டில் நடைபெற்றது போல் ஒரேமாதத் தில் அரசு கவிழும் மீண்டும் ஒரு தேர் தல் நடத்தப்படுவதைத் தவிர்க்க முடி யாது என்றும் பிரதமர்கூறினார்.

மீண்டும் ஒரு தேர்தல் நடைபெறு வதை நாம் வரவேற்கவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் கட்சியை ஆட்சியமைக்க ஜனாதிபதி இடமளிக்கவேண்டும். இல்லையேல் மீண்டும் ஒரு தேர்தல் தான் முடிவு என்றார் பிரதமர்.

சிறுபான்மை அரசு அமைக்கப்பட் டால் சமாதானப்பேச்சு தொடருமா? உதவி வழங்கும் நாடுகள் உதவி களை வழங்குமா எனக் கேள்விகள் எழுப்பட்டன.

உறுதியான அரசாங்கம் அமையா விட்டால் சமாதானப் பேச்சுக்கள் மட்டுமல்ல எல்லா விடயங்களுமே பாதிக்கப்படும் முதலில் பெரும்பான்மை அரசு அமையட்டும் எனப் பதிலளித் தார் பிரதமர்.

உங்களுடைய சமாதான முன் னெடுப்புகளையும் மக்கள் நிராக ரித்து விட்டனரே என்றார் ஒரு நிருபர்.

"உங்களுடைய கருத்தை நிரா கரிக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள முடி யாது" என்றார் பிரதமர்.

ஏற்கனவே 2001ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் மக் கள் எமக்கு ஆணை வழங்கினர். ஆனால், இம்முறை எந்தவொரு கட்சிக்கும் மக்களின் உறுதியான ஆணை கிடைக்கவில்லை.

எமக்கு ஆட்சி அமைக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் டோக்கியோ பிரகடனத்தின் அடிப்படையில் பேச் சுக்களைத் தொடருவோம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கூறி னார்.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிழக்கில் அண்மைக்காலமாக இடம் பெற்ற சிக்கல்களின்போது தமிழ் தேசியத்தை நிலைநிறுத்தியவர்கள் யார் என்பதை இனம்கண்டு இந்தப் பதவியை அவருக்கு வழங்குவது குறித்து ஆராயப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

முஸ்லிம் ஒருவருக்கு உறுப்பினா பதவியை வழங்குவது தொடர்பாக வும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது என்று அவர் சொன்னார்.

பெரும்பாலும் ஜோசப் பரராஜசிங் கத்துக்கு ஓர் இடம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தவாரமளவில் இதுதொடர் பாக இறுதிமுடிவு எடுக்கப்படவிருக் கிறது. (ஒ-3)

## மகிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று முன்னிரவு வரை நீடித்தது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் நேற்று பல சுற்றுப்பேச்சுக் களை நடத்தின. மந்திராலோசனைகள் நீடித்தன.

ஆட்சி அமைப்பதற்கு தேவை யான ஆகக்குறைந்த 113 ஆசனங் களையாவது பெற்றுக் கொள்வது தொடர்பாகவும்-அமைக்கும் அரசாங் கத்தில் யார் யாரை அமைச்சர்களாக நியமிப்பது என்றும்- பிரதமராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித தும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட் டது.

ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ மன் கதிர்காமரைப் பிரதமராக நிய மிக்கலாம் என்று முதலில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவரே பிரதம ராகப் பதவியேற்க வேண்டும் என் றும், நியமனப்பட்டியல் மூலம் எம்பியா கும் ஒருவர் பிரதமராவது ஜனநாயகத் துக்கு இழுக்கு என்றும் சில மட்டங் களில் தெரிவிக்கப்பட்ட கருத்தை அடுத்து கதிர்காமரைப் பிரதமராக நியமிக்கும் திட்டம் கைவிடப்பட்ட தாகக் கூறப்பட்டது.

நேற்றிரவு கிடைத்த தகவல்களின படி மகிந்த ராஜபக்ஷ இன்று 13 ஆவது நாடாளுமன்றத்தின் பிரதமரா கப் பதவியேற்பார் என்பது ஓரளவு உறுதியாகியிருந்தது. அநேகமாக இன்று காலை 10.30 மணிக்கு அவரது பதவியேற்பு வைபவம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. (க-ரி)

விசேட மாலை நேர வகுப்புகள்
ஆசிரியர்கள், தொழில்புரிப வர்களுக்கான விசேட மாலை நேரக் கணனி வகுப்புகள் இன்றுமுதல் ஆரம்பமாகின்றன.
ஆர்வமுள்ளவர்கள் உடனடி யாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள்.
இயக்குநர், IIS யாழ்ப்பாணம்.
(C/34090)(40)

NEW SCIENCE COLLEGE JAFFNA
2006 A/L
பொறியியல் MON., WED. 8.00 - 9.00 (நடைபெறுகின்றது)
ஔியியல் MON., WED. 9.00 - 10.30 (Maths) 12.00 - 1.30 (Bio)
ஆரம்பம்: 07.04.2004 [WED.]
By - M.கருணாநிதி
(30540)(40)

A/L 2006
வர்த்தகப்பிரிவு
பிரிவு II
ஆரம்பம்:07.04.04.
புதன் மாலை 4மணி (ப.நே)
Acc: திரு.பாலவாசன்
Eco: திரு.மோகன்
B.St: திரு.யசோ
BEACON
வெலிங்டன் சந்தியருகில்.
(30475)(38)

வேலையாள்கள் தேவை
அரிசி ஆலையில் வேலை செய் வதற்கு வேலையாள்கள் தேவை. சாப்பாட்டுடன் தங்குமிட வசதியும் உண்டு.
இராசம் அரிசி ஆலை, மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
(C/34248)(38)

CHEMISTRY CENTRE
Temple Rd., நல்லூர்.
A/L 2005 INORGANIC
Tue., Fri. 3 - 4 p.m.
A/L 2006 GENERAL
Mon.,Fri. 5.30 - 6.30 p.m.
By: அன்பழகன்
(C/34257)(38)

A/L 2006,2005
இணைந்த கணிதம்
By - விஜேந்திரன் B.Sc.
புதிய அலகுகள் ஆரம்பம் 07.04.2004 புதன் 3.00 p.m.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
A/L 2004 PAPER நடைபெறுகின்றன.
BARATHY
சித்தன்கேணி
(30524)(38)

விக்னா கல்வி நிலையம்
52, ஸ்ரான்லி வீதி, - யாழ்.
பிரிவு 3
O/L DAY CLASS
(8.30 - 2.00)
ஆரம்பம் 09.04.2004
★பிரிவு 2 அனுமதிகள் நிறுத்தப் பட்டுள்ளன.
★இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே.
★பிரிவு 4 வெகுவிரைவில்.
(30511)(40)

O/L DAY CLASS
வளர்மதி கல்வி நிலையம்
பிரதேசசெயலக அருகில் கண்டி வீதி, சாவகச்சேரி.
ஆரம்பம்: 07-04-2004
புதன் காலை 9.00 மணி
தென்மராட்சி முன்னணி ஆசிரியர் களின் ஒருங்கிணைந்த சேவை.
குறிப்பு: கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் என்பன வாரத்தில் ஐந்து நாள்கள் போதிக்கப்படும்.
அனுமதிக்கு முந்துங்கள்
- இயக்குநர்.
(C-34093)(40)

SUBRA (14)
சித்தன்கேணி
விசேட வகுப்பு
O/L கணிதம், ஆங்கிலம்
கடந்த O/L பரீட்சையில் மேற்படி பாடங்களில் சித்திபெறத்தவறிய மாணவர்களுக்கான விசேட மாலை நேர வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
தினமும் மாலை 6.00 - 8.00 (பு.நே.)
ஆரம்பம்: 07.04.2004 (புதன்) மாலை 6.00 மணி
சிங்கள வகுப்பு ஆரம்பமாகிவிட்டது.
திரு.லீலாகிருஷ்ணன்
06.04.2004
(C/34152)(38-12-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.